ග්‍රාමීය නිවාස සහ ඉදිකිරීම් හා ගොඩනැගිලි ද්‍රව්‍ය කර්මාන්ත ප්‍රවර්ධන රාජ්‍ය අමාත්‍යාංශය
கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப்பொருட்கள் தொழில்மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு
STATE MINISTRY OF RURAL HOUSING AND CONSTRUCTION & BUILDING MATERIALS INDUSTRIES PROMOTION

වාර්ෂික වාර්තාව
வருடாந்த அறிக்கை
Annual Report
2021

CIDA



ඉදිකිරීම් කර්මාන්ත සංවර්ධන අධිකාරිය
நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபை
CONSTRUCTION INDUSTRY DEVELOPMENT AUTHORITY



உள்ளடக்கம்

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை **பக்கம்**

1.0 நிறைவேற்றுச் சுருக்கம்

1.1 அறிமுகம்.....01

1.2 தூரநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள்.....01

1.3 முக்கிய தொழிற்பாடுகள்.....02

1.4 நிறுவனக் கட்டமைப்பு 03

1.5 நிகைஅஅச இன் பிரதான பிரிவுகள்.....04

1.6 அதிகார சபையின் கீழ் வருகின்ற நிறுவனங்கள்/நிதியங்கள்.....04

2.0 முன்னேற்றமும் மற்றும் எதிர்கால கண்ணோட்டமும்

2.1 கைத்தொழில் சேவைகள் பிரிவு.....05

2.2 அபிவிருத்திப் பிரிவு.....08

2.3 மின்சார எந்திர சேவைகள் பிரிவு.....12

2.4 நிர்மாண உபகரண இயக்குநர் பயிற்சிப் பிரிவு.....13

2.5 நிர்மாண உபகரணங்கள் பராமரிப்பு பிரிவு.....18

2.6 கைத்தொழில் பயிற்சிப் பிரிவு.....24

2.7 வீடமைப்பு திட்டமிடுகைக்கும் கட்டிடத்திற்குமான நிலையம்.....26

2.8 மனித வள மற்றும் நிருவாகப் பிரிவு.....29

2.9 நிதிப் பிரிவு.....34

3.0 நிதிக் குறிப்புகள் 2021.....36

4.0 செயலாற்றுகை சார்ந்த சுட்டிகள்.....91

1.0 நிறைவேற்றுச் சுருக்கம்

1.1 அறிமுகம்

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை (நிகைஅஅச) நிர்மாணப் பயிற்சி அபிவிருத்திற்கான நிறுவகத்திற்கு பின்னர் (நிபஅநி) வாரிசு நிறுவனமாக 2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தாபிக்கப்பட்டுள்ளது.

1.2 தூரநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள்

தூரநோக்கு

"சர்வதேச தரநியமங்களை மேலோங்கி இலங்கையில் நம்பத்தகுந்த தகுதிவாய்ந்த ஒரு நிர்மாணக் கைத்தொழிலை பேணுதல்"

செயற்பணி

"நிலைபெறுதகு தேசிய அபிவிருத்திற்கான உள்நாட்டு மற்றும் சர்வதேச தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யும் பொருட்டு ஒரு தேசிய நிர்மாணக் கொள்கை, ஒழுங்குவிதிகள், ஆற்றல் கட்டியெழுப்பல், அபிவிருத்தி, தர நியமங்கள் மேம்பாடு என்பவற்றின் ஊடாக துல்லியமான காத்திரமான தொழில்சார்ந்த கைத்தொழில் சேவைகளை உறுதிப்படுத்தி அதன் மூலம் நிர்மாண கைத்தொழிலுக்கு திறைமுறைத் தலைமைத்துவத்தை வழங்குதல்".

குறிக்கோள்கள்

2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் சட்டத்தினது நீள்தலைப்பு நிர்மாணக் கைத்தொழில் அதிகார சபையின் ஒட்டுமொத்த குறிக்கோள்களையும் இலக்குகளையும் பின்வருமாறு பிரதிபலிக்கின்றது.

"நிர்மாணம் பற்றிய தேசிய ஆலோசனை சபையை தாபிப்பதற்கு உரிய ஏற்பாடுகளை செய்யும் வகையில் நிர்மாணக் கைத்தொழில் சார்ந்த செயற்பாடுகளைப் பதிவு செய்வதற்கும், ஒழுங்குறுத்துவதற்கும் மற்றும் நியமப்படுத்துவதற்கும், தொழில்தேர்ச்சியாளர்களுடனும், உற்பத்தித் தரப்புகளுடனும் மற்றும் விநியோகத் தரப்புகளுடனும், நிர்மாணத் தரப்புகளுடனும் மற்றும் கைப்பணி வல்லுநர்களுடனும் சம்பந்தப்படும் இந்தக் கைத்தொழிலின் மேம்பாட்டிற்கும் மற்றும் அதன் நலனுக்கும், மேலும் இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சார்பாக பொது மக்களினது பாதுகாப்பையும், அத்தகைய கைத்தொழில் சம்பந்தமான அல்லது அதற்கு இடைநேராக எழும் விடயங்களை உறுதிசெய்யும் வகையில் நிர்மாண செயற்பாடுகளுடன் சம்பந்தப்படும் பிணக்குகளை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளின் நிமித்தம் ஏற்பாடுகளை செய்வதற்கும், நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையைத் தாபிப்பிப் பதற்கும், நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி நிதியத்தையும் மற்றும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் நிதியத்தையும் தாபிப்பதற்கும் உரிய ஒரு சட்டமாகும்."


1.3 முக்கிய தொழிற்பாடுகள்

- கௌரவ அமைச்சர் வழங்குகின்ற பணிப்புரைகளுக்கு இணங்க நிர்மாணம் தொடர்பான தேசிய கொள்கை செயற்படுத்துகையை உறுதிசெய்தல்.
- நிர்மாணக் கைத்தொழில் துறையின் நிலையான அபிவிருத்தி, சீர்திருத்தம் மற்றும் அதன் மேம்பாடு ஆகியவற்றை ஊக்குவிக்கும் பொருட்டு நிர்மாணக் கைத்தொழிலில் சம்பந்தப்படும் அக்கறை உடைய தரப்புகளுக்கு திறமுறைத் தலைமைத்துவத்தை வழங்கல்.
- அவ்வப்பொழுது குறிப்பீடு செய்யப்படலாம் என்றவாறு நிர்மாணக் கைத்தொழிலில் சம்பந்தப்படும் அக்கறை உடைய தரப்புகளை பதிவு செய்தல் மற்றும் அத்தகைய பதிவுகளை புதுப்பித்தல்.
- சக்தி வினைத் திறன் வாய்ந்த கட்டிடங்களினதும் அதே போல் நிர்மாணங்களினதும் வடிவமைப்புக்கும் மற்றும் அபிவிருத்திற்கும் விஷேட கவனத்தை செலுத்துவதால் நிர்மாணக் கைத்தொழிலின் நிலையான வளர்ச்சியை மேம்படுத்துதல்.
- நிர்மாண கைத்தொழிலுடனும் மற்றும் அதன் அபிவிருத்தியுடனும் சம்பந்தப்படும் ஏதாவது ஒரு ஆராய்ச்சிப் பணி வெளியீட்டையும் அது பற்றிய செய்தியை பரப்புவதையும் மற்றும் பொருத்தமான ஆராய்ச்சியையும் மேம்படுத்துதல்.
- ஏனைய பொருத்தமான அதிகாரிகளுடன் ஆலோசித்து, நிர்மாணக் கைத்தொழில் தர நியமங்களை வகுத்தமைத்தல், அத்தகைய தர நியமங்களை கட்டாய தர நியமங்களாகவும் மற்றும் தன்னார்வ தர நியமங்களாகவும் வகைப்படுத்துதல்.
- அதிகார சபை வகுத்தமைத்துள்ளவாறு நிர்மாணக் கைத்தொழில் சம்பந்தப்படுகின்ற நடத்தை விதிக் கோவைகள், செயன்முறைகள், நடைமுறைகள், செயல்முறைகள் மற்றும் ஆவணமயப்படுத்தல் முதலியவற்றை செயற்படுத்துதல்.

கூட்டிணைந்த திட்டம், குறித்த சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அனைத்து தொழிற்பாடுகளையும் உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த இந்தத் திட்டம் கூறப்பட்ட கால வரையறையினுள் அத்தகைய தொழிற்பாடுகளின் செயற்படுத்துகையை உறுதிசெய்கின்றது. 2020-2024 ஆம் ஆண்டு காலப் பகுதிற்கான நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திக் கொள்கை மற்றும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி சட்டம் மற்றும் கூட்டிணைந்த திட்டம் என்பன தயாரிக்கப்பட்டதன் பின்பு 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயற்படுத்துகைத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

ஒவ்வொரு செயற்பாட்டிலிருந்தும் எதிர்பார்த்த வருமானம் மற்றும் கால இலக்குகள் மற்றும் அடைந்த முன்னேற்றம் அடங்கலாக 2021 ஆம் ஆண்டில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் அந்தந்தப் பிரிவுகளின் கீழ் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளன.

1.4 நிறுவனக் கட்டமைப்பு



1.5 நிகைஅஅச இன் பிரதான பிரிவுகள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு நான்கு இயக்கச்செயற்பாட்டு பிரிவுகள் ஊடாக நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை (நிகைஅ அச) தனது தொழிற்பாடுகளை மேற்கொண்டு நிறைவேற்றுகின்றது. ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு பணிப்பாளர் தலைமை வகிப்பார். அத்தகைய பிரிவுகள் பின்வருமாறு:

a. கைத்தொழில் சேவைகள் பிரிவு
b. அபிவிருத்திப் பிரிவு
c. மின்னியல் எந்திர சேவைகள் பிரிவு
d. கைத்தொழில் பயிற்சிப் பிரிவு

1.6 அதிகார சபையின் கீழ் வருகின்ற நிறுவனங்கள்/நிதியங்கள்

1. நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி நிதியத்தின் நிதியம் - உள்ளக நிதியம்
2. நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி நிதியம் - தாபிக்கப் படவுள்ள

2.0 முன்னேற்றமும் மற்றும் எதிர்கால கண்ணோட்டமும்

2.1 கைத்தொழில் சேவைகள் பிரிவு

கைத்தொழில் சேவைகள் பிரிவு, தொழில்நுட்பத் தகவுதிறன்களையும், நியம தரமான கேள்விமனு ஆவணங்களையும் மற்றும் நிர்மாணக் கைத்தொழில் தொடர்பான புள்ளி விபரங்களையும் வெளியிடுதல், தொழில்நுட்ப மற்றும் பெறுகை விடயங்கள் தொடர்பாக ஆலோசனை சேவைகளை வழங்குதல், மாற்றுவழி பிணக்குத் தீர்த்தல் நடைமுறைகளுக்கு ஏற்பாடு செய்தல், தொழில் நுட்பக் கணக்காய்வை நடத்துதல், நிர்மாணப் பொருளாதார ஆராச்சிகளை மேற்கொள்ளல், நடுத்தீர்ப்பாளர்களைப் பதிவு செய்தல், கண்காணித்தல், இனங்காணப்பட்டுள்ள நிர்மாண வேலைகளின் பதிவை பேணுதல் முதலிய அம்சங்களின் மூலம் நிர்மாணக் கைத்தொழிலை ஒழுங்குறுத்த உதவுகின்றது. இந்தப் பிரிவு நிர்மாணக் கைத்தொழிலை பயனுள்ள மற்றும் வினைத்திறன் வாய்ந்ததாக ஆக்குகின்ற நிர்மாணசார் செயற்பாடுகளை ஒழுங்குறுத்துதல், இணங்கச்செய்தல், கட்டமைத்தல் ஆகிய விடய அம்சங்கள் மூலம் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திற்கு தலைமை வகிக்கின்ற வாடிக்கையாளர்கள், ஆலோசகர்கள், ஒப்பந்தத் தரப்புகள், கொள்கை ஆக்குநர்கள், முதலீட்டுத் தரப்புகள், திட்டமிடுகின்ற தரப்புகள் முதலிய நிர்மாணக் கைத்தொழிலில் அக்கறை உடைய தரப்புகளுக்கு இந்தப் பிரிவு சேவைகளை வழங்குகின்றது.

கைத்தொழில் சேவைகள் பிரிவு இரண்டு துணைப் பிரிவுகளைக் கொண்டு காணப்படுகின்றது. அவையாவன ஆலோசனை சேவைகள் மற்றும் நிர்மாண பொருளாதாரம்.

a) ஆலோசனை சேவைகள்

ஆலோசனை சேவைகள் என்பது தொழில்நுட்பம், பொருளாதாரம் மற்றும் நிர்மாண நிபுணத்துவம் ஆகியன கலந்த ஒரு பிரிவாகும். இது மூலதனம் மற்றும் தொடர்ச்சியான பணிகள் ஆகியவற்றை உள்ளடக்கியது. நிர்மாணத் துறையை மேம்படுத்துவதே எமது பணியாக இருப்பதால், பொது மற்றும் தனியார் துறை வாடிக்கையாளர்கள் ஒப்பந்த விடயங்களில் தெளிவான விளக்கத்தையும் ஆலோசனைகளையும் அதிகளவில் எதிர்பார்ப்பார்கள்.

2021 ஆம் ஆண்டில் ஆலோசனை சேவைகள் துணைப் பிரிவினால் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- பிணக்குகள் தீர்த்தல் சேவைகளை வழங்குவதற்காக நடுத்தீர்ப்பாளர்கள் குழுவை பதிவு செய்தல்.
  2016 ஆம் ஆண்டு முதல் CIDA இணையதளத்தில் நடுத்தீர்ப்பாளர்களின் பட்டியல் வெளியிடப்பட்டது. கைத்தொழில் நிர்மாண அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் நடுத்தீர்ப்பாளர்களைப் பதிவு செய்வது கட்டாயமாகும். இது 2019 ஆம் ஆண்டு வர்த்தமானி முடிவு செய்யப்பட்டு 57 நடுத்தீர்ப்பாளர்கள் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.
  ஒப்பந்தத்தில் உள்ள தரப்பினரின் கோரிக்கையின் பேரில் 2021 ஆம் ஆண்டில் 14 நடுத்தீர்ப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

- தர முகாமைத்துவ கணக்காய்வாளர்கள் பதிவு - 2021 இல் புதுப்பிக்கப்பட்ட QMA இன் எண்ணிக்கை ஆறு.

- பிணக்குகள் தீர்த்தல் சேவைகளுக்கு நடுத்தீர்ப்பாளர்களை நியமித்தல் மற்றும் நிர்மாண கைத்தொழிலுக்கு ஆலோசனை சேவைகளை வழங்குதல்.

விலை ஏற்ற இறக்கம், CIDA தர நியம கேள்வி மனு ஆவணங்கள், தொழில்நுட்ப தர நியமங்கள், தொழில்நுட்ப விவரக்குறிப்புகள் மற்றும் வழிகாட்டல், கேள்வி மனு ஆவணங்கள், ஒப்பந்த நிர்வாகம், பிணக்குகள் தீர்த்தல் மற்றும் CIDA சூத்திரம் என்பன தொடர்பான ஆலோசனை சேவைகளை இந்தப் பிரிவு வழங்குகிறது.

மேற்கூறிய பிரிவுகளில் ஒப்பந்தசார் பிணக்குகளை எதிர்நோக்கிய ஏராளமான ஒப்பந்த தரப்புகள், அரசு நிறுவனங்கள் என்பவற்றினால் வாய்மொழியாகவும் எழுத்துமூலமாகவும் ஆலோசனைகள் கோரப்பட்டன. மேற்குறித்த விடயங்கள் தொடர்பாக 3000 ஆலோசனைகள் 2021 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளன.

.

2021 ஆம் ஆண்டில் பின்வரும் நடுத்தீர்ப்புகள் நடத்தப்பட்டன.

1. KASE இன்ஜினியரிங் - தரைத்தள பென்சிலின் மூலப்பொருள் களஞ்சியத்தை உற்பத்திப் பிரிவாக மாற்றுவதற்கான வடிவமைப்பு மற்றும் ஒப்பந்தம். ஒப்பந்த இலககம்: SPMC/P/2015/03- அரச மருந்துப் பொருட்கள் உற்பத்தி

2. அனுடி நிர்மாணம் - உத்தேச மாற்றம், கழுவும் அறையை மாற்றியமைத்தல் - காலி மரபுரிமை மன்றம்

3. சிங்கே கட்டுமானம் - பல துறைகளின் பழுது மற்றும் மேம்பாடு (AA1/3/2018/04) சுதேசிய மருத்துவ நிறுவகம் - சுதேசிய மருத்துவ நிறுவகம்

4. ஆர்ச் இன்டர்நேஷனல் பிஎல்டி-மிரிஹானா மற்றும் கறுவாத்தோட்டம் காவல் நிலையம்-கட்டிடத் திணைக்களத்தில் உள்ள போலீஸ் மெஸ் மற்றும் பாராக்ஸ் கட்டிடத்தின் இருப்புப் பணிகளை நிர்மாணித்து முடித்தல்.

- நிர்மாணக் கைத்தொழிலின் திறனை மேம்படுத்த மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களால் 25 மாவட்டங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப் பட்டன. CIDA செயற்பாடுகளை மேற்கொள்ள பின்வருமாறு 17 மாவட்டங்களில் மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

CIDA பதிவு (C7 இற்கு கீழே, புதுப்பித்தல், மேம்படுத்துதல்), ஸ்தல விஜயம் (டெங்கு விழிப்புணர்வு விஜயம், பாரிய கருத் திட்ட விஜயம் போன்றவை), ஆலோசனை சேவைகள், கருத்தரங்குகள் நடத்துதல், கைவினைப் பதிவு (NCASL மற்றும் DS அலுவலக விஜயம்), ஷாமா சிகுரு திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், CIDA மாவட்டக் குழுக் கூட்டத்திற்கான பிரதிநிதி, தலைமை அலுவலகத்திற்கு ஒதுக்கும் அவசர அலுவலக வேலைகள், சிறப்புப்பணிகள் என்பவற்றுக்கு ஆன்லைனில் பதிலளித்தல் (செய்தித் தரவு சேகரிப்பு, நிர்மாண மூலப்பொருள் பற்றாக்குறை கணக்கெடுப்பு போன்றவை)

b) நிர்மாண பொருளாதாரம்

நிர்மாண பொருளாதாரம் என்பது செயன்முறையான நிலைபெறுதகு நிதித் தீர்மாணங்கள் கருத் திட்டம் முழுதிலும் நிறைவேற்றப்பட்டு நிறைவு செய்யப் படுகின்றனவா என்பதற்கு கருத் திட்டத்தின் ஆரம்பத்திலிருந்து நிகழ்ந்து வரும் ஒரு நிர்மாண பொருளாதார செயன்முறையாகும்.

பின்வரும் செயற்பாடுகள் 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் உப நிர்மாண பொருளாதாரப் பிரினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- இலங்கையின் நிர்மாண கைத்தொழிலில் உள்ள உள்நாட்டு நிர்மாண ஒப்பந்த தரப்புகளை சர்வதேச தரத்திற்கு மாறச்செய்ய இனங்காணப்பட்ட நிர்மாண செயற்பாடுகளின் நிமித்தம் தேவையான தகவுதிறன்கள், தர நியம ஆவணங்கள்,

நியம கேள்வி மனு ஆவணங்கள் என்பவற்றை தயாரித்தல், மீளாய்வு செய்தல் மற்றும் வெளியிடுதல்.

2021 ஆம் ஆண்டில் பின்வரும் ஆவணங்கள் வெளியிடப்பட்டன.

1. கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் டெங்கு நோய் ஆகியவற்றுக்கான சுகாதார மற்றும் நோய்எதிர்ப்பு சக்தி மேம்பாடு தொடர்பான வழிகாட்டிகள்
2. கோவிட்-19 தொற்றுநோயின் பின்னரான முன்னேற்றம்
3. கட்டிடக் கருத் திட்டங்களின் நிர்மாண கட்டத்திற்கான ஒரு நிர்மாண பசுமை சுற்றாடல் வழிகாட்டில்
4. நிர்மாண கைத்தொழிலுக்கான பசுமை மூலப்பொருள் விலை வழிகாட்டல்கள்

- நிர்மாணம் மற்றும் பராமரிப்பு வேலை, ஆலோசனை வழங்கும் தரப்புகள் மற்றும் நிபுணர்கள் ஆகிய தரப்புகளை பயிணியில் அமர்த்தல் மற்றும் விஷேட சாட்டுதல் நிறுவனங்கள் என்பவற்றுக்கான பெறுகைத் திறமுறைத்திட்டங்கள் தொடர்பாக ஆலோசனை வழங்குதல்.

- இலங்கையை நிர்மாண கைத்தொழிலில் சர்வதேச ரீதியாக உள்நாட்டில் ஒரு சிறப்பு நிலையை அடையச்செய்வதற்கு தேவையான நிர்மாணத் திட்டங்களை தயாரிக்கும் முகமாக கட்ட்டக்கலைஞர்களின் நிறுவகம், பொறியியலாளர்களின் நிறுவகம், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் என்பவற்றின் கூட்டெத்துழைப்பில் பசுமையான கட்டிட மூலப்பொருட்கள், உதிரிப்பாகங்கள் மற்றும் செயல்முறைகள் என்பவற்றை தரப்படுத்தல்.

- கட்டிட மூலப்பொருட்களின் விலை ஏற்றத்தாழ்வு தொடர்பான ஒரு மாதாந்த செய்தியை வெளியிடுவதன் மூலம் நிர்மாண கைத்தொழிலில் உள்ள அக்கறை உடைய தரப்புகளை மேலும் இற்றைப்படுத்தல்.

  சுட்டிகளை தயாரிப்பதற்கு, கட்டிட மூலப்பொருட்களின் விலைகள், தொழிலாளர் கூலி, பொறித் தொகுதி வாடகைக் கட்டணங்கள் என்பன தொடர்பான தகவல் சேகரிக்கப்பட்டு, செவ்வைபார்க்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன. குறித்த இந்த செய்திக் குறிப்பு நிர்மாண கருத் திட்டங்களில் மேற்குறித்தவற்றின் விலை ஏற்றத்தாழ்வுகளை கணிப்பிடுவதற்கு பிரதானமாக பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறு 12 செய்திக் குறிப்புகள் இலவசமாக கட்டணம் இன்றி CIDA இணையத் தளத்தில் பிரசுரிக்கப்பட்டன.

  நிர்மாண கைத்தொழிலில் மூலப்பொருட்களின் விலைகள் திடீரென அதிகரித்த காரணத்தினால் நிர்மாண கைத்தொழில் தொடர்பாக மூன்று அக்கறை உடைய கூட்டங்கள் நடத்தப்பட்டு, நிர்மாண ஒப்பந்த தரப்புகளை பாதுகாக்கும் முகமாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. நுகர்வோர் விவகாரங்கள் அதிகார சபையுடனும், நிதி அமைச்சுடனும் அமைச்சு மட்டக் கூட்டம் நடத்தப்பட்டது. மூன்று மாதங்களுக்கு அதிக காலம் உடைய கருத் திட்டங்களின் நிமித்தம் ஒரு விலை ஏற்றத்தாழ்வு சூத்திரம் பிரயோகிக்கப்படுவதை கட்டாயப்படத்தும் முமாக அமைச்சரவைப் பத்திரம் வெளியிடப்பட்டுள்ளது.

2.2 அபிவிருத்திப் பிரிவு

i. நிர்மாண ஒப்பந்த தரப்புகளுக்கான தேசிய பதிவு மற்றும் தரப்படுத்தல் திட்டம்

பதிவும் தரப்படுத்தலும் என்பது எந்த ஒரு விஷேட ஒப்பந்தத்திற்கும் குறிப்பு ஏதும் இன்றி வித்தியாசமான வகை கருத் திட்டங்களையும், வித்தியாசமான அளவுக் கருத் திட்டங்களையும் மேற்கொண்டு நிறைவேற்றுவதற்கு தமக்கு உள்ள பொதுவான ஆற்றலை நிர்ணயிக்கும் பொருட்டு எதிர்கால ஒப்பந்த தரப்புகளின் ஆற்றல்களுக்கான ஒரு தெரிவுப் படிமுறையாகும். பதிவும் தரப் படுத்தலும் ஒப்பந்தத் தரப்பின் தொழில் நுட்ப மற்றும் நிதி நிலைமைகளை ஆராய்வதன் மூலம் நிர்ணயிக்கப்படுகின்றன.

2021 ஆம் ஆண்டிற்கு நிர்மாண ஒப்பந்த தரப்புகளை பதிவு செய்யும் இலக்கு 3500 ஆகவும் மற்றும் அடைவு மட்டம் 2563 ஆகவும் இருந்தன. புதிய பதிவுகள், இற்றைப்படுத்தல்கள், பதிவு புதுப்பித்தல்கள் என்பன இதில் அடங்குகின்றன.

ஒன்லைன் பதிவு - மேம்பாட்டுப் பிரேரணை

ஒன்லைன் பதிவு வசதியை அதிகரிக்கும் முகமாக நிதிகளை வழங்கும் ஒரு பிரேரணை அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

நிர்மாண ஸ்தலங்களில் கோவிட்-19 தொற்றுநோய் பாதுகாப்பு பற்றிய ஆய்வு

நிர்மாண ஸ்தலங்களில் கோவிட்-19 தொற்றுநோய்க்கு ஈடுகொடுப்பது பற்றி ஆராயும் பொருட்டு மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களின் (DCOs) ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பாக 700 பதில்கள் கிடைத்தன.

ஒப்பந்த தரப்புகளின் பதிவுக்கான தடைக்காலம்

கோவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக 2021.05.01 ஆம் திகதி முதல் 06 மாதங்களுக்கு ஒப்பந்த தரப்புகளின் பதிவுக்கு தடை விதிக்கப்பட்டது. 1218 ஒப்பந்த தரப்புகள் இந்த காலகட்டத்தில் பயனடைந்தனர்.

நீர் வழங்கல் பிரிவு ஒப்பந்த தரப்புகளின் பதிவில் நெகிழ்தன்மையை பேணுதல்

நீர் வழங்கல் பிரிவு ஒப்பந்த தரப்புகளுக்கு அவற்றின் ஆகக்கூடிய குறிப்பீடு செய்யப்பட்டுள்ள 1500 ரூபா (மில்லியன்) தொகைக்கு அதிக பெறுமானம் உடைய பாரிய கருத் திட்டங்களுக்கு அந்த தரப்புகள் விண்ணப்பிப்பதற்கு C1 தர ஒப்பந்த தரப்புகளை இயலச்செய்யும் வகையில் ஒரு நெகிழ்தன்மையை பேணியது.

ii. ஆதன அபிவிருத்தி தரப்புகளை பதிவு செய்தல்

அக்கறை உடைய தரப்புகளின் தேவைகளை பூர்த்தி செய்தல், இறுதிப் பயனர் திருப்தியை அதிகரித்தல் மற்றும் முதலீட்டு தரப்பு நம்பிக்கையை மேம்படுத்த செய்தல் கைத்தொழில் பிணக்குகளை குறைத்தல் மற்றும் கைத்தொழிலின் நன்மதிப்பை கட்டியெழுப்புதல் ஆகியவற்றின் நிமித்தம் ஆதன அபிவிருத்தி கைத்தொழிலை நெறிப்படுத்துவது ஆதன அபிவிருத்தி தரப்புகளை பதிவு செய்வதற்கான நோக்கமாகும்.

இன்று வரையான செயல்முறையும் முன்னேற்றமும்

2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாண கைத்தொழில் சட்டத்தின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆம் திகதிய 2181 / 21 ஆம் இலக்க வர்த்தமானியில் நிர்மாண கைத்தொழிலின் 42 ஆம் ஒழுங்குவிதிகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

10 ஆதனங்கள் அபிவிருத்தி தரப்புகள் மாத்திரம் 2021 ஆம் ஆண்டிற்கு பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஆதன அபிவிருத்தி தரப்புகள் மந்த கெதியில் சேர்த்துக் கொள்ளப்படுவதால், தேவைப்பாட்டை அனுசரிக்குமாறு கோரி சகல எதிர்கால ஆதன அபிவிருத்தி தரப்புகளுக்கும் விழிப்புணர்வு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. மேலும், 341 உள்ளூராட்சி மன்றங்களுக்கு அவற்றின் அங்கீகார செயல்முறையில் ஒரு முன்னுரிமையும் ஒரு தேசிய தேவைப்பாடும் அவசியம் என்பதால் CIDA நிறுவனத்தில் அவற்றை கட்டாயம் பதிவு செய்யுமாறு கோரி கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

ஆதன அபிவிருத்தி தரப்பு - சர்வதேச வணிக மற்றும் கொள்கைகள் திணைக்களத்தின் மூலமான கொள்கைப் பிரேரணை

ஆதன அபிவிருத்தி தரப்புகளின் பதிவில் 'ரியல் எஸ்ட்ரேட்டு முகவர்களை' உள்ளீர்ப்பதற்கான ஒரு வேண்டுகோள் வணிக மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்களத்திடமிருந்து கிடைத்தது. ஒரு பூர்வாங்க ஆய்வு நடத்தப்பட்டு அது பற்றி நிரல் அமைச்சுக்கு அறிக்கையிடப்பட்டது.

iii. வெளிநாட்டு ஒப்பந்த தரப்புகளை தற்காலிகமாக பதிவு செய்தல்

வெளிநாட்டு ஒப்பந்த தரப்புகளை பதிவு செய்தலும் தொழிலில் அமர்த்தலும் 2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாண கைத்தொழில் சட்டத்தின் 39 ஆம் பிரிவு மற்றும் அதனையடுத்து 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23 ஆம் திகதிய 2085/19 ஆம் இலக்க வர்த்தமான அறிவித்தலின் ஏற்பாடுகள் ஆகியவற்றினால் ஒழுங்குறுத்தப்படுகின்றன. பணிப்பாளர்கள் சபையினால் உரிய முறையில் அங்கீகரிக்கப்பட்டிருந்த தகவுதிறன்கள் 2016 ஆம் ஆண்டில், அக்கறை உடைய தரப்புகள் அனைத்தையும் பிரதிநிதிப்படுத்தும் ஒரு குழுவினால் தயாரிக்கப் பட்டன.

குறித்த வர்த்தமான அறிவித்தல் வெளியிடப்பட்ட நேரத்தில் ஏற்கனவே தமது கருத் திட்டங்களை ஆரம்பித்திருந்த நிர்மாண ஒப்பந்தத் தரப்புகளை பதிவு செய்யும் பொருட்டு, கடுமையான தேவைப்பாடுகளை பின்பற்றாமல் ஒரு நியாயமான பொறிமுறையும் அறிமுகப்படுத்தப்படும்.

2021 ஆம் ஆண்டிற்கு வெளிநாட்டு ஒப்பந்த தரப்புகளை பதிவு செய்வதற்கு எதிர்பார்த்த இலக்கு 17 ஆகும். எனினும், தொற்றுநோய் நிலைமை இருந்த போதிலும் மீளாய்வு ஆண்டு காலப் பகுதியினுள் 23 வெளிநாட்டு ஒப்பந்த தரப்புகள் பதிவு செய்யப்பட்டன.

iv. ஒழித்துக்கட்டப்பட்ட நபரை/தாபனங்களை பதிவு செய்தல்

2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தின் 26 ஆம் மற்றும் 33 ஆம் பிரிவுகளின் பிரகாரம் தொழில்தேர்ச்சி தர நியமங்களை மேம்படுத்துவதற்கு குறிப்பாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சூழல்களில் தகுதி வாய்ந்த நபர்கள் மற்றும் செயன்முறைகள் பதிவேடு ஒன்றை பேண வேண்டும் என நிர்மாண கைத்தொழிலின் ஒழுங்குறுத்துகை அதிகார சபை என்ற வகையில் ICTAD இன் சட்டமுறையான வாரிசு நிறுவனமாக விளங்கும் இந்த நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபைக்கு (நிகைஅஅச) கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

பின்வரும் வகுதிகளில் நபர்களையும் ஆலோசனை சேவை தரப்புகளையும் பதிவு செய்யும் நடவடிக்கையை CIDA ஆரம்பித்துள்ளது.

a) இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகம், பொறியியலாளர்கள் ஆலோசனை பேரில், 1968 இன் 17 ஆம் இலக்க இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகத்தின் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது.

b) கட்டடக்கலைஞர்கள் ஆலோசனை பேரில், 1979 இன் 1 ஆம் இலக்க இலங்கை கட்டடக்கலைஞர்கள் நிறுவக சட்டத்தின் கீழ் இலங்கை கட்டடக்கலைஞர்கள் நிறுவகமும் கட்டடக்கலைஞர்களை பதியும் சபையும் தாபிக்கப்பட்டன.

c) கனிய அளவையாளர்கள் ஆலோசனை பேரில், 2007 இன் 20 ஆம் இலக்க கனிய அளவையாளர்கள் நிறுவக கட்டத்தினால் (கூட்டிணைத்தல்) இலங்கை கனிய அளவையாளர்கள் நிறுவகம் தாபிக்கப்பட்டது.

ஆலோசனை செயன்முறைகள் பற்றிய பின்வரும் ஆவணங்கள் 2020 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டுள்ளன.

➢ **இலங்கை ஆலோசனை செயன்முறைகள்/தாபனங்கள்**

- இலங்கை ஆலோசனை சேவை செயன்முறைகள் பதிவு விதிமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகள்
- இலங்கை ஆலோசனை செயன்முறைகள் பதிவுப் பிரயோகம்

➢ **வெளிநாட்டு ஆலோசனை செயன்முறைகள் (தனிநபர்கள்/தாபனங்கள்)**

- வெளிநாட்டு ஆலோசனை செயன்முறைகளின் தற்காலிக பதிவுக்கான விதி முறைகள் மற்றும் ஒழுங்குவிதிகள்
- வெளிநாட்டு ஆலோசனை செயன்முறைகளின் தற்காலிக பதிவுப் பிரயோகம்

தகுதி வாய்ந்த நபர்கள் பற்றிய ஒரு ஆய்வு 2021.09.01 ஆம் திகதி ஆரம்பிக்கப் பட்டு 2021.09.14 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டுள்ளது. சுமார் 700 பதில்கள் கிடைத்தன.

சான்றிதழ் வழங்கும் குழுவை மறுசீரமைத்தல்

அதிகளவான உறுப்பினர்களை உள்ளடக்கி மறுசீரமைக்கப்பட்ட சான்றிதழ் வழங்கும் ஒரு குழு (NCASL மற்றும் CCI) 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் தாபிக்கப் பட்டது. முன்னைய குழு (2018-2020) தயாரித்திருந்த தாபனங்கள் பதிவு பற்றிய ஆவணத்தை மீளாய்வு செய்வது இந்த குழுவுக்கு சாட்டப்பட்ட 1-வது சிறப்புப் பணியாகும்.

v. நிர்மாண சிறப்புக்கான CIDA விருதுகள்

வருடாந்த விருது வழங்கும் திட்டம் 1990 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் திட்டம் தொடர்ந்து 30-வது தடவைக்கும் நிர்மாண கைத்தொழிலின் சிறப்பையும் தொழில் தேர்ச்சியையும் மேம்படுத்தும் முகமாக 2019 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த விருது வழங்கும் திட்டம் தொழில் நுட்ப நிபுணத்துவத்தினதும் தரத்தினதும் உயர்ந்த தொழில் தேர்ச்சி அளவு, நிர்மாண முகாமைத்துவத்தில் பிரத்தியேக செயலாற்றுகை, புத்தாக்கங்களினதும் சரியான தொழில் நுட்பங்களினதும் அறிமுகம் மற்றும் கைப்பணி வல்லுநர் பயிற்சியில் பங்குபற்றல் முதலியவற்றை மதித்து உரிய விருதுகளை வழங்க உதவுகின்றது.

கோவிட்-19 தொற்றுநோய் காலத்தில் பயணக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட காரணத்தினால் ஸ்தல விஜயங்களை பிற்போடவேண்டியிருந்தது.

ஆகையால், 2021 ஆம் ஆண்டிற்கு விருதுகளை வழங்குவதற்கு தேர்ந்து எடுக்க வேண்டிய கருத் திட்டங்களின் இறுதி மதிப்பீடுகள் 2020 ஆம் ஆண்டில் நடத்தப் பட்டன. 2022 ஆம் ஆண்டின் 1-வது காலாண்டு பகுதியினுள் 2020-2021 ஆம் ஆண்டுகளுக்கு விருது வழங்கும் ஒரு விழாவை நடத்த தீர்மானிக்கப்பட்டது.

vi. CIDA இன் தகவல் தொழில் நுட்ப முறைமைகள்

தகவல் தொழில் நுட்ப உட்கட்டமைப்பில் உள்ளீர்க்கும் முகமாக பின்வரும் மறைமுக செயற்பாடுகள் இனங்காணப்பட்டுள்ளன.

a. பின்வருவன 2019/2020 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் நிறைவு செய்யப் பட்டுள்ளன.

1 தகுதி வாய்ந்த நபர்கள் பதிவு முறைமை
2 கொடுப்பனவு வாயில் ஒன்றிணைப்பு
3 இணையத்தள இற்றைப்படுத்தல்
4 ஆவண முகாமைத்துவ முறைமை

b. பின்வருவனவற்றின் பெறுகை வேலைகள் / அபிவிருத்திப் பணிகள் குறித்த ஆண்டு காலப் பகுதியில் நிகழ்ந்து வருகின்றன.

1 ஆதன அபிவிருத்தி தரப்பு பதிவு முறைமை
2 வெளிநாட்டு நிர்மாண ஒப்பந்த தரப்பு பதிவு முறைமை
3 நிர்மாண மூலப்பொருட்கள் உதிரிப்பாகங்கள் உற்பத்தி, இறக்குமதி மற்றும் விநியோக தரப்புகள் பதிவு முறைமை
4 இனங்காணப்பட்ட நிர்மாண பணிகள் தகவல் முறைமை
5 தர முகாமைத்துவ கணக்காய்வாளர் பதிவு முறைமை
6 மூலப்பொருட்களின் செலவுகள் கணிப்பீட்டு முறைமை
7 நடுத்தீர்ப்பாளர்கள் பதிவு முறைமை
8 நிர்மாண எந்திரங்கள் உபகரணங்கள் பதிவு முறைமை

vii. கைத்தொழில் பிணக்குகள் தொடர்பான கூட்டங்களை நடத்துதல்

நிர்மாண ஒப்பந்த தரப்புகளும் மற்றும் நிர்மாண கைத்தொழிலில் அக்கறை உடைய தரப்புகளும் எதிர்நோக்குகின்ற பொதுவான பிரச்சினைகள் பற்றி அடையாளப்படுத்துவதற்கு இரண்டு அக்கறை உடைய தரப்பு ஆலோசனை கூட்டங்கள் நடத்தப்பட்டன.

viii. நிர்மாண ஸ்தலங்களில் டெங்கு ஒழிப்பு பணி / விழிப்பூட்டும் பணி

தொற்றுநோய் நிலவியமையினால், தலைமை அலுவலக விழிப்பூட்டும் குழு திட்டமிட்டவாறு அதனால் பணியை தனது முழு ஆற்றலிலும் நிறைவேற்ற முடியவில்லை. எனினும், மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் (DCO) 297 நிர்மாண ஸ்தலங்களுக்கு விஜயம் செய்து தமது பணிகளை தொடர்ந்தும் மேற்கொண்டு நிறைவேற்றினார்கள்.

2.3 மின்சார எந்திர சேவைகள் பிரிவு

100 புனர்வாழ்வளிக்கப்பட்டவர்களை திரட்டு நிதியின் ஊடாக பெக்கோ லோடெர் இயக்குநர்களாக பயிற்சி அளித்தல்



போதைப்பொருட்களுக்கு அடிமையாகி புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகத்தின் பணியகத்தில் புனர்வாழ்வு பயிற்சியை பெற்ற இளைஞர்களின் வாழ்க்கைத் தொழில் திறன்களை அபிவிருத்தி செய்யும் இந்த பெறுமதிமிக்க சிறப்புப்பணியில் CIDA மின்சார எந்திர சேவைகள் பிரிவு தலையீட்டு ரீதியில் சம்பந்தப்படுகின்றது.

புனர்வாழ்வளிக்கப்பட்ட இந்த இளைஞர்களை சமூகத்தினுள் உள்ளீர்ப்பதற்கு முன்னர் NVQ மட்டம் 3 இன் கீழ் பெக்கோ லோடெர் இயக்க திறன்களில் இவர்களை வளர்த்தெடுப்பதானது கேள்வி நிலவுகின்ற நிர்மாண உபகரண இயக்கப் பிரிவில் பயனுள்ள தொழில் வகுதியினுள் இவர்களை உள்ளீர்ப்பதற்கும் அதே நேரம் பெக்கோ லோடெர் இயக்கத்தில் வாழ்க்கைத் தொழில் திறன்களை பெற்று புனர்வாழ்வளிக்கப்பட்டவுடன் அவர்களின் இழந்த மதிப்பை கண்டுகொள்ளக்கூடிய வகையில் அவர்களை இயலச்செய்து நாட்டில் துல்லியமாக தொழில் வீணாதலை குறைப்பதற்கும் நன்மை அளிக்கும்.



குறிப்பாக நிர்மாண தொழில் வகுதிகளில் பெக்கோ லோடெர் இயக்குநர்களுக்கு கேள்வி நிலவுகின்ற ஒரு தொழில் பிரிவாக விளங்கும் துல்லியமான ஊழியர் படையினுள் இந்த சிறப்புரிமை குறைந்த பிரிவினரை உள்ளீர்ப்பதிலுள்ள முக்கியத்துவத்தை அறிந்து ஐந்து ஆண்டு காலப் பகுதியினுள் 17.5 மில்லியன் ரூபா திரட்டு நிதியை செலவு செய்து பெக்கோ லோடெர் இயக்குநர்களாக புனர்வாழ்வளிக்கப்பட்ட 500 பேர்களின் திறன்களை அபிவிருத்தி செய்வதற்கு இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. 2021 ஆம் ஆண்டில், புனர்வாழ்வளிக்கப்பட்ட 60 பேர்கள் சிறப்புரிமை பெற்றார்கள். இது தொடர்பான கருத் திட்டத்திற்கு 2.1 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டது.

இந்தப் பிரிவினருக்கு சரியான ஒரு முறையில் புனர்வாழ்வளிக்கப்பட்டு பெக்கோ லோடெர் இயக்க வாழ்க்கைத் தொழில் திறன்களை அபிவிருத்தி செய்யும் இந்த பரந்த முழுமையான தலையீட்டு திறமுறையின் ஊடான இவர்களை சமூகத்தில் மீண்டும் வெற்றிகரமாக உள்ளீர்க்க முடியும். மேலும் அவர்கள் இழந்த அவர்களின் வாழ்வை புதிதாக வளர்த்த தமது வாழ்க்கைத் தொழில் திறன்களை கொண்டு மீள அனுபவிக்கும் வகையில் அவர்களை ஊக்குவித்து துல்லியமான ஊழியர் படைக்கு பங்களிக்கவும் முடியும்

2.4 நிர்மாண உபகரண இயக்குநர் பயிற்சிப் பிரிவு





தூரநோக்கு:

"சகல பயிலுநர்களுக்கும் மற்றும் வாடிக்கையாளர்களுக்கும் சிறந்த ஒரு சேவையை வழங்கி நிர்மாண கைத்தொழிலில் தேர்ச்சி பெற்ற மனித வலு தேவையை பூர்த்தி செய்து எமது அர்ப்பணிப்புடைய ஊழியர்களின் வலிமையின் ஊடாக மிகவும் வெளிப்படைத்தன்மை வாய்ந்த ஒரு அரச நிறுவனமாக திகழ்தல்"

செயற்பணி:

"நிர்மாண கைத்தொழிலில் தகுதி வாய்ந்த ஒரு ஊழியர் படையை வளர்த்து நிர்மாண உற்பத்தித் திறனில் கணிசமானளவு அதிகரிப்பு இலக்கை அடைந்து கொள்ளும் முகமாக நிர்மாண உபகரணங்களின் இயக்கம், பராமரிப்பு மற்றும் முகாமை ஆகியன பற்றிய அறிவையும் திறன்களையும் கற்றுக் கொடுத்தல்"

குறிக்கோள்கள்:

- நிர்மாண உபகரண இயக்குநர்களை உறுதிப்படுத்தப்பட்டுள்ள தேசிய திறன்கள் தர நியமத்திற்கு பயிற்சி அளித்தல்
- பொறித் தொகுதி முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை முகாமைத்துவம் பற்றிய பாடநெறிகளை நடத்துதல்
- நிர்மாண உபகரண இயக்குநர்களுக்கான தேசிய செயன்முறை மற்றும் NVQ பரீட்சைகளை நடத்துதல்
- நிர்மாண உபகரண இயக்குநர்கள் அவர்களின் தொழில்களை வினைத் திறனாகவும் மற்றும் பயனுள்ளதாகவும் மேற்கொள்ளக் கூடிய வகையில் அவர்களின் திறன்களை மேம்படுத்துதல்

- **நிர்மாண கைத்தொழிலுக்கு எந்திரங்களையும் உபகரணங்களையும் வாடகைக்கு விடுதல்**
- **இயக்குநர்களை இற்றைப்படுத்தி தேசிய அபிவிருத்திற்கு பங்களிக்கும் முகமாக அதிக அனுபவத்தை பெற்றுக் கொள்ளும் பொருட்டு அரசாங்க நிர்மாண கருத் திட்டங்களின் பங்காளியாக இருத்தல்**

அறிமுகம்

க்ரவுலெர் ட்ரக்டெர், லோடெர், எக்ஸ்கேவேட்டெர், மோட்டார் க்ரேடெர் போன்ற நிர்மாண உபகரணங்கள் பற்றி அவற்றை இயக்குகின்ற இயக்குநர்களுக்கு அவற்றின் பாதுகாப்பு, அடிப்படை பராமரிப்பு மற்றும் இயக்க நுட்பங்களுக்கு விஷேட கவனத்தை செலுத்தி நிர்மாண உபகரணங்கள் இயக்குநர் பயிற்சிக் கல்லூரி பயிற்சியை வழங்குகின்றது. OTC 62 நிர்மாண உபகரணங்களையும் போதியளவு பயிற்சி அளிக்கின்ற உத்தியோகத்தர்களையும் மற்றும் செய்து காண்பிப்பாளர்களையும் கொண்டுள்ளது.

பயிற்சி காலத்தில் ஏறக்குறைய 70% வீதம் பயிலுநர்களுக்கு திறன்கள் பற்றிய பரிட்சய அனுபவத்தை பெற்றுக் கொடுக்கும் முகமாக செயன்முறை பயிற்சி நிமித்தம் ஒதுக்கப்படுகின்றது. 30% வீதம் கோட்பாட்டு ரீதியான பயிற்சிக்கு மட்டுப்படுத்தப்படுகின்றது. வருமானத்தை ஈட்டும் நிமித்தம் சில நிர்மாண உபகரணங்கள் வாடகைக்கு விடப்படுகின்றன. இதில் இருந்து ஈட்டப்படுகின்ற வருமானம் பயிலுநர்களுக்கு தொழில் பயிற்சியை வழங்க செலவு செய்யப் படுகின்றது.

மேலே குறிப்பிடப்பட்டவாறும் மற்றும் நிர்மாண கருத் திட்டங்கள் நிகழ்கின்ற போதும் தொழில் பயிற்சியை உள்ளடக்கிய நிறுவனசார் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் OTC பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் அடங்குகின்றன. நிறுவன சார் பயிற்சியை நிறைவு செய்து ஆகக்குறைந்தது OJT பற்றிய மூன்று மாத கால பயிற்சியை பெற்ற ஒரு பயிலநர் NVQ இற்கு தகுதி உடையவராவார். OTC, நிர்மாண உபகரண இயக்குநர்களுக்கான NVQ பரீட்சைகளுக்கு வசதிகளை அளிப்பதற்கான நிறுவனமாக NAITA அங்கீகரித்துள்ளது.

OTC நிலையத்தில் பின்வரும் பயிற்சிப் பாடநெறிகள் தற்பொழுது நடத்தப் படுகின்றன.

1. பூர்வாங்க பயிற்சி

   1.1 அடிப்படை நிர்மாண உபகரண பராமரிப்பு

2 பல திறன்கள் உடைய நிர்மாண உபகரண இயக்குநர்
(சபிரி யந்திர நியாமக்க - SAYANI)

10 வகை நிர்மாண உபகரணங்களுக்கும் அதிகளவான உபகரணங்களை இயக்குவதற்கு திறன்கள் உடைய இயக்குநர்களுக்கு பயிற்சியை வழங்கும் முகமாக SAYANI விஷேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. கைத்தொழிலில் பல

திறன்கள் உடைய இயக்கநர்களுக்கு நிலவும் தேவையை பூர்த்தி செய்வதற்கு நவீன கற்றல் முறைகளைக் கொண்டு இது புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ள ஒரு நிகழ்ச்சித் திட்டமாகும். நிர்மாண ஸ்தலங்களிலும் தொடர்ச்சியான சேவைகளிலும் குறைந்த மேன்தலை உடைய அதிக வெளியீடு எதிர்பார்க்கப் படுகின்றது. இது 100% அரசாங்கம் நிதியளிக்கும் ஒரு இலவச நிகழ்ச்சித் திட்டமாகும். இந்த நிகழ்ச்சித் திட்டம் வருடாந்தம் பல திறன்கள் உடைய 1000 நிர்மாண உபகரண இயக்குநர்களை உருவாக்குகின்றது. குறித்த முன்னோடி நிகழ்ச்சித் திட்டம் 2021 ஆம் ஆண்டில் 42 இயக்குநர்கள் வெளியீட்டுடன் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டில் வெளியீட்டு இலக்கை அடைவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

3 திறன்கள் அபிவிருத்தி

3.1 இலகு நிர்மாண உபகரணங்கள்
3.2 குப்பை குவிக்கும் ட்ரக்வண்டி
3.3 பண்ணை உழவியந்திரம்
3.4 சுயமாக உந்தும் அதிர்வு ரோலர்
3.5 க்ரவுலெர் ட்ரக்டெர்
3.6 வீல் லோடெர்
3.7 மோட்டார் கிரேடெர்
3.8 ஹைட்ரோலிக் எக்ஸ்கேவேட்டெர்
3.9 பெக்கோ லோடெர்
3.10 ஸ்கிட் ஸ்டியர் லோடெர்
3.11 மோபைல் க்ரெய்ன்
3.12 ப்ளான்ட் ட்ரான்ஸ்போர்ட்டெர்
3.13 போக் லிப்ட் ட்ரக்
3.14 ட்ரக் மவுன்டெட் க்ரெய்ன்

3.1 - 3.14 வரையான சகல பயிற்சிப் பாடநெறிகளும் கட்டணம் இன்றிய இலவச பாடநெறிகளாகும். இவற்றில் சில பாடசாலையை விட்டு விலகுபவர்களுக்கும் மற்றும் தொழில் இல்லாத இளைஞர்களுக்கும் மத்தியில் அதிக கேள்வி உடைய பாடநெறிகளாகும்.

4. செயன்முறை பரீட்சைகள்
4.1 NVQ பரீட்சைகள்

5. பிரத்தியேக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்
பிரத்தியேக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் விஷேடமாக வடிவமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களாகும். இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் நிறுவனங்கள் அவற்றின் தேவைகள் பேரில் விடுக்கும் வேண்டுகோளை பூர்த்தி செய்கின்றன.

6. நிர்மாண உபகரணங்கள் சம்பந்தமான சேவைகள்

OTC கைத்தொழில் நிறுவனங்களின் தேவையின் பேரில் நிர்மாண உபகரணம் சம்பந்தமான சேவைகளை வழங்குகின்றது. நிர்மாண உபகரணங்கள் தொகுதி 2021 ஆம் ஆண்டில் வேண்டுகோளின் பேரில் அவற்றின் தகைமைகள் நிமித்தம் சோதனையிடப்பட்டது.

பயிற்சி வெளியீடு 2021

ஒவ்வொரு பயிற்சி வகுதி தொடர்பான இயக்குநர் பயிற்சி அடைவுகள் பற்றிய விபரங்கள் கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன ***(தயவு செய்து 1 ஆம் அட்டவணையை பார்க்கவும்).***

அட்டவணை 1 : பயிற்சி வெளியீடு 2021

	பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	வெளியீடு 2021	
		நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை
1.0	**பூர்வாங்க பயிற்சி**		
	1.1 அடிப்படை நிர்மாண உபகரணங்கள் பராமரிப்பு	05	131
2.0	**திறன்கள் அபிவிருத்தி**		
	2.1 பல திறன்கள் உடைய நிர்மாண உபகரண இயக்குநர்கள் ("சபிரி யந்திர நியாமக்க")	01	42
	2.2 உயர் தர வாழ்க்கைத் தொழில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (ஆண்டு 13 கல்வி)	01	36
	2.3 புனர்வாழ்வளிக்கப்பட்டவர்களை பெக்கோ லோடெர் இயக்கநர்களாக பயிற்சி அளித்தல்	02	60
	2.4 நிர்மாண உபகரண இயக்குநர்கள்	10	52
	மொத்தம்	**19**	**321**


பயிற்சி உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி


தொழில் நுட்பம் வளர்ச்சி அடைவதால், புதிய நிர்மாண உபகரணங்களும் உயர் கட்டுப்பாட்டு முறைமைகளும் அதிக தொழிற்பாட்டு வசதியும் உடையனவாக வருகின்றன. இயக்குநர்களுக்கு அந்த நவீன உபகரணங்கள் பற்றிய அறிவும் திறன்களும் இருத்தல் அவசியமாகும். எனவே OTC தனது நிர்மாண உபகரண தொகுதிகளை நவீன தொழில் நுட்பத்தைக் கொண்டு இற்றைப்படுத்துகின்றது. உயர் கட்டுப்பாட்டு முறைமை உடைய ஒரு பெக்கோ லோடெர் அதன் நீண்ட கால அபிவிருத்தி கருத் திட்டத்தின் ஒரு கட்டமாக 2021 ஆம் ஆண்டில் உபகரண தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது.

நிர்மாண உபகரணங்களை வாடகைக்கு விடுதல்

நிர்மாண உபகரணங்களை வாடகைக்கு விடுவது இயக்குநர் பயிற்சி கல்லூரி வழங்கும் ஒரு மேலதிக சேவையாகும். இதன் மூலமாக கல்லூரிக்கும் அதிகளவு வருமானம் ஈட்டப்படுகின்றது. பயிற்சி, ஏற்கனவே இருக்கின்ற எந்திரங்களை பயன்படுத்துவதற்கான முன்னுரிமையாகும். எந்திரங்கள் முடங்கிக் கிடக்கும் போது அவை கிடைக்கக் கூடிய போதெல்லாம் வாடகைக்கு விடப்படுகின்றன.

2.5 நிர்மாண உபகரணங்கள் பராமரிப்பு பிரிவு





இந்தப் பிரிவு விஜேசிங்க மாவத்தை, பெலவத்த, பத்தரமுல்ல என்ற இடத்தில் அமைந்துள்ளது. நிர்மாண உபகரணங்கள் பராமரிப்பு, பழுதுபார்ப்பு மற்றும் முகாமைத்துவம் பற்றிய பயிற்சிப் பாடநெறிகளை நடத்த CETRAC நிலையம் வசம் போதிய வசதிகள் உள்ளன. கருத் திட்ட பராமரிப்பு முகாமையாளர்கள், எந்திர பொறியியலாளர்கள், வேலையரங்கு மேற்பார்வையாளர்கள், சிரேஷ்ட எந்திரவியலாளர்கள், எந்திர உதவியாளர்கள் மற்றும் பாடசாலையை விட்டு விலகும் நபர்கள் ஆகியோருக்கு இந்தப் பயிற்சிப் பாடநெறிகள் இந்த CETRAC நிலையத்தில் நடத்தப்படுகின்றன.

1.0 CETRAC பயிற்சி நிழக்ச்சித் திட்டங்கள்

1996 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் முதல் 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் ஜப்பான் நிபுணர்களின் உதவியுடன் நிர்மாண உபகரணங்கள் பராமரிப்புக்கான இந்த CETRAC பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் முதலில் தயாரிக்கப்பட்டன. அடிப்படையாக CETRAC, நிர்மாண உபகரணங்கள் பராமரிப்பும் முகாமைத்துவமும் பற்றிய பயிற்சியை வழங்குகின்றது. இந்த CETRAC நிலையத்திலும் கட்டிட சேவைகள் பொறியியல் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்கும் CIDA ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

2.0 கைத்தொழிலுக்கு புதிதாக நுழைவோருக்கான பாடநெறிகள்

இளைஞர்களின் வேலை இல்லா பிரச்சினைகளை தீர்ப்பதில் உதவும் முகமாக பாடசாலையை விட்டு ஆரம்பத்திலேயே விலகுபவர்களுக்குரிய அதிகளவான வாழ்க்கைத் தொழில் பயிற்சிப் பாடநெறிகளையும் தயாரித்து நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அந்த தீர்மானத்திற்கு இணங்க, பின்வரும் பாடநெறிகள் 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நடத்தப்பட்டன.

3.0 நிர்மாண உபகரண தொழில் நுட்பவியலாளர் பாடநெறி

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் (NAITA) கூட்டொத்துழைப்பில் நிர்மாண உபகரண தொழில்நுட்ப பயிற்சிப் பாடநெறி நடத்தப்படுகின்றது. இது ஒரு இரண்டு வருடப் பாடநெறியாகும். CETRAC இல் 12 மாத கால நிறுவனசார் பயிற்சியும் மற்றும் கைத்தொழிலில் 12 மாத தொழில் பயிற்சியும் இதில் உள்ளடங்குகின்றன. க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தி அடைந்து பாடசாலையை விட்டுவிலகுபவர்கள் இந்த பயிற்சிப் பாடநெறியை பின்பற்றுவதற்கு தகுதி உடையவர்களாவர். நவீன நிர்மாண உபகரணங்கள் பழுதுபார்ப்பும் பராமரிப்பும் பற்றிய சகல விடய அம்சங்களும் இந்தப் பயிற்சி


பாடநெறியில் அடங்குகின்றன. இந்தப் பயிற்சிப் பாடநெறிக்கு வருடாந்தம் 120 பயிலுநர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

பயிற்சி காலப் பகுதியில் இலவசமாக தங்குமிடவசதிகள், பாடநெறி நூல்கள், வேலையரங்கு வசதிகள், சீருடைகள் மற்றும் சலுகை விலையில் உணவுகள் மற்றும் பாதுகாப்பு கவசங்கள் முதலியன இந்தப் பயிலுநர்களுக்கு வழங்கப் படுகின்றன. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னைய சகல பயிலுநர்களுக்கும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பயனுள்ள தொழில்கள் கிடைத்துள்ளன. சில பயிலுநர்கள் நிர்மாண உபகரண பழுதுபார்ப்புக்கும் பராமரிப்புக்கும் என தமது சொந்த வேலைப்பட்டறைகளை அமைத்துள்ளனர். இந்த நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்கின்ற பயிலுநர்களுக்கு NVQ 4 ஆம் மட்ட சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

4.0 ஊழியர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான எதிர்கால பயிற்சிப் பாடநெறிகள்

நிர்மாண உபகரணங்களின் பழுதுபார்ப்பிலும் பராமரிப்பிலும் ஈடுபடுகின்ற எந்திரவியலாளர்கள் மற்றும் சம்பந்தப்படும் மேற்பார்வையாளர்கள் மற்றும் முகாமையாளர்கள் ஆகியோரின் தொழில் நுட்ப அறிவை மேம்படுத்துவதற்கு மேலும் பயிற்சி பாடநெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பயிலுநர் தொடர்பாகவும் தனிப்பட்ட கவனத்தை செலுத்தும் பொருட்டு ஒரு தொகுதி பயிலுநர்களுக்கு 12 பயிலுநர்கள் வீதம் பயிலுநர் சேர்த்தல் மட்டுப்படுத்தப் படுகின்றது. இந்தப் பாடநெறியை பின்பற்ற குறித்த துறைகளில் போதியளவு அனுபவம் அவசியமாகும்.

4.1 கனிஷ்ட எந்திரவியலாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்



நிர்மாண உபகரணங்கள் பழுதுபார்ப்பு பட்டறைகளில் வேலை செய்யும் கனிஷ்ட எந்திரவியலாளர்களின் அறிவையும் திறன்களையும் மேம்படுத்தும் பொருட்டு இந்தப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பயிற்சிப் பாடநெறியை பின்பற்றுவதற்கு இரண்டு முதல் ஐந்து வருட கால அனுபவம் அவசியமாகும். தமது பயிற்சி தேவைகளை பொறுத்து தேர்ந்தெடுக்கும் ஏதாவது மொடியூலுக்கு தமது எந்திரவியலாளர்களை அனுப்புவதற்கு தொழில் தருநர்களை இயலச்செய்யும் பொருட்டு இந்தப் பாடநெறிகள் வித்தியாசமான மொடியூல்களாக வகுக்கப்பட்டுள்ளன. ஹைட்ரோலிக்ஸ் மற்றும் மெகாட்ரோனிக்ஸ் ஆகிய மொடியூல்களுக்கு கைத்தொழிலில் அதிக கேள்வி நிலவுகின்றது. ஆகையால், இவற்றில் சில மொடியூல்கள் தொடர்பான மேலதிக பாடநெறிகள் நடத்தப்படுதல் வேண்டும்.

4.2 சிரேஷ்ட எந்திரவியலாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்



சிரேஷ்ட எந்திரவியலாளர்களின் அறிவையும் திறன்களையும் மேம்படுத்துவதற்கும் மற்றும் பழுதுகளை கண்டறிந்து அவற்றை சீர்செய்து கொள்வது பற்றி அவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கும் என இந்த உயர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஐந்து வருடங்களுக்கு அதிக காலம் அனுபவம் உடைய எந்திரவியலாளர்கள் இந்தப் பயிற்சிப் பாடநெறியில் கலந்து கொள்வதற்கு தகுதி உடையவர்களாவர். இந்தப் பயிற்சிப் பாடநெறிகளில் 6 வித்தியாசமான மொடியூல்கள் உள்ளடங்குகின்றன. தமது பயிற்சியை பொறுத்து தேர்ந்தெடுக்கும் ஏதாவது மொடியூலுக்கு தமது எந்திரவியலாளர்களை அனுப்புவதற்கு தொழில் தருநர்களை இயலச்செய்யும் பொருட்டு இந்தப் பாடநெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஹைட்ரோலிக்ஸ் மற்றும் மெகாட்ரோனிக்ஸ் ஆகிய மொடியூல்களுக்கு கைத்தொழிலில் அதிக கேள்வி நிலவுகின்றது. ஆகையால், சில வேளைகயில் இந்த மொடியூல்கள் தொடர்பான மேலதிக பாடநெறிகள் நடத்தப்படுதல் வேண்டும்.

4.3 மேற்பார்வையாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்


நிர்மாண உபகரணங்கள் பராமரிப்புக்கு பொறுப்பு உடைய வேலைப்பட்டறை மேற்பார்வையாளர்களின் அறிவை மேம்படுத்துவதற்கு மேற்பார்வையாளர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இரண்டு வருட கால பொருத்தமான அனுபவம் உடைய மேற்பார்வையாளர்கள் இந்த பாடநெறிகள் நிமித்தம் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.


4.4 பொறியியலாளர்கள் / முகாமையாளர்கள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

நிர்மாண உபகரணங்களின் பாவனையிலும் பராமரிப்பிலும் சம்பந்தப்படும் பொறியியலாளர்களினதும், பட்டறை முகாமையாளர்களினதும், கருத் திட்ட முகாமையாளர்களினதும் அறிவை மேம்படுத்தும் முகமாக இந்த பயிற்சி நிகழ்ச்சி திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

நிர்மாண உபகரணங்களின் பாவனையும் மற்றும் பராமரிப்பும் பற்றி சிவில் பொறியியலாளர்களுக்கும் கருத் திட்ட முகாமையாளர்களுக்கும் அறிவை வழங்கும் பொருட்டு **நிர்மாண உபகரணங்கள் பாவனை** பற்றிய பயிற்சி பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. இரண்டு வருட கால அனுபவம் உடைய பொறியியலாளர்கள் இந்த பாடநெறிக்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள்.

நிர்மாண உபகரணங்களின் பராமரிப்புக்கும் பழுதுபார்ப்புக்கும் பொறுப்பு உடைய எந்திர பொறியியலாளர்களுக்கும் மற்றும் முன்னிலை வகிக்கின்ற முகாமையாளர்களுக்கும் **நிர்மாண உபகரணங்களின் பராமரிப்பு** பற்றிய பயிறசி பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த பாடநெறியை பின்பற்றும் முகமாக பங்குபற்றுநர்களுக்கு இரண்டு வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.





4.5 துணை ஊழியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

நிர்மாண கைத்தொழிலுக்காக வழமையாக வேலை செய்யும் களஞ்சியங்கள் / விநியோக / கருத் திட்ட ஊழியர்களுக்கு முறையான பயிற்சிக்கான வாய்ப்பு கிடைப்பதில்லை. இது பல இயக்கச்செயற்பாட்டு பிரச்சினைகளின் நிமித்தம் வழிவகுத்துள்ளது. இதனால் உபகரண பழுதுபார்ப்பு வேலைப் பட்டறைகளின் தொழிற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன. இந்த பயிற்சி தேவையை நிவர்த்தி செய்யும் முகமாக இந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன.

4.6 கட்டிட சேவைகள் பொறியியல் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

CETRAC, கட்டிட சேவைகள் பொறியியல் பிரிவில் பொறியியலாளர்களுக்கும் கட்டடக்கலைஞர்களுக்கும் பல நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியுள்ளது.
வர்த்தக கட்டிடங்களை பராமரிப்பதற்கு தேவையான இந்த கட்டிட சேவைகள் அணவப்படும் வகையில் ஒரு சில பயிற்சி பாடநெறிகள் வடிவமைக்கப்பட்டு காணப்படுகின்றன. தீ பாதுகாப்பு முறைமைகள், மின்சார முறைமைகள், குளிரூட்டல் மற்றும் காற்றோட்ட முறைமைகள், நீர் விநியோக வடிவமைப்பு முறைமைகள் முதலியன இவற்றில் உள்ளடங்குகின்றன.

4.7 வாடிக்கையாளர் மைய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

பெற்றுள்ள நல்ல அனுபவத்தைக் கொண்டு, நாட்டில் சவால் நிறைந்த கேள்வியை அடையாளப்படுத்தும் பொருட்டு பிரத்தியேகமான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் பயிற்சியில் காணப்படுகின்ற பல்வேறு வகையான மற்றும் விஷேட வகையான கேள்வியை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்கு CETRAC ஆல் முடிந்துள்ளது.

2021 ஆம் ஆண்டின் CETRAC செயலாற்றுகை பற்றிய விபரம் பின்வருமாறு:

அட்டவணை1 : 2021 ஆம் ஆண்டு CETRAC செயலாற்றுகை

	பயிற்சி பாடநெறிகள்	பதிவு செய்யப்பட்ட		வெளியாகிய	
		பாட நெறி எண்.கை	பங்கு பற்றுநர் எண்.கை	பாட நெறி எண்.கை	பங்கு பற்றுநர் எண்.கை
0	பாடசாலையை விட்டுவிலகுபவர்கள் (மட்டம் I) நிர்மாண உபகரண எந்திர பாடநெறி (CEM)	2	120	2	85
	பயிற்சி பாடநெறிகள்	**இலக்குக் கொள்ளப்பட்ட வெளியீடு**		**உண்மையான வெளீயீடு**	
		பாட நெறி எண்.கை	பங்கு பற்றுநர் எண்.கை	பாட நெறி எண்.கை	பங்கு பற்றுநர் எண்.கை
02	**கனிஷ்ட எந்திரவியலாளர் (மட்டம் II)**				
	டீசல் என்ஜின் பராமரிப்பு (21M21)	1	15	--	--
	ஹைட்ரோலிக் முறைமைகள் பராமரிப்பு (21M22)	1	15	--	--
	நிர்மாண உபகரணங்களின் மின்சார முறைமைகள் பராமரிப்பு (21MT)	1	10	1	10
	சென்ட்ரிபியுகெல் பாம்பி இயக்க பராமரிப்பு	1	15	1	13
	சிரேஷ்ட எந்திரவியலாளர் (மட்டம் III)				
	தானியக்க மின்சார முறைமைகள் பராமரிப்பு (21M34)	1	15	--	--
	ஹைட்ரோலிக் மற்றும் மெகாட்ரோனிக்ஸ் முறைமைகள் பராமரிப்பு (21M32)	1	15	--	--
	பொறியியலாளர்கள்				
	நிர்மாண உபகரண கருத் திட்டமுகாமைத்துவம் (21CPM)	1	15	--	--
	நிர்மாண உபகரண பராமரிப்பு முகாமைத்துவம் (21CEMM)	1	10	--	--
	மேற்பார்வையாளர்				
	நிர்மாண உபகரண ஹைட்ரோலிக் ட்ரான்ஸ்மிஷென் பராமரிப்பு மேற்பார்வை (21SUP1)	1	15	--	--
	நிர்மாண உபகரண என்ஜின் மெகாட்ரோனிக்ஸ் பராமரிப்பு மேற்பார்வை (21SUP2)	1	10	--	--
	ஒட்சிசன் எஷ்டைலீன் எரிவாயு ஒட்டும்முறை, மெனுவல் உலோக ஆர்க் ஒட்டும்முறை (21GAW)	1	15	1	13
03	**துணை ஊழியர்கள்**				
	துணை ஊழியர்களுக்கான களஞ்சிய காப்பு, விநியோக சங்கிலி மற்றும் களஞ்சிய முகாமைத்துவ பாடநெறி	1	15	1	26
	நிறுவனத்தின் சிற்றூழியர்களுடனான ஒழுக்க உறவுகள், கடமைகள், உபசரணை பற்றிய ஒரு நாள் வேலையரங்கு	1	15	1	55
	இருப்பு, பொருட்கள் முகாமைத்துவம் பற்றிய கோட்பாடுகள் மற்றும் செயன்முறை பயன்பாடு	1	20	1	22
	உற்பத்தித்திறனின் ஊடான தற்போதைய கோவிட்-19 தொற்றுநோய் சவாலை நிறுவனம் எதிர்நோக்குவதற்கான ஓய்வு தலைமை நானே மற்றும் சகபாடிகள் என்ற எண்ணக்கரு	1	15	1	9
	ஒரு நிறுவனத்தில் தர முகாமைத்துவ எண்ணக்கருக்களின் பிரயோகம்	1	25	--	--
	களஞ்சிய காப்பு பற்றிய அடிப்படை பாடநெறி	1	20	--	--
	களஞ்சிய காப்பு, விநியோக சங்கிலி மற்றும் பொருட்கள் சேவைகள் முகாமைத்துவம் பற்றிய உயர் சான்றிதழ் பாடநெறி	1	15	--	--

04	**பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட பாடநெறிகள் (CET)**				
	முள்ளுக்கிண்டி ட்ரக்வண்டி இயக்குநர் பயிற்சி (ஐந்து நாட்கள்)	1	10	1	2
	ஹைட்ரோலிக் மற்றும் மின்னியல் ஹைட்ரோலிக் கட்டுப்பாட்டு முறைமை	1	15	1	17
	முள்ளுக்கிண்டி ட்ரக்வண்டி பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் (2 நாட்கள்)	1	15	1	2
	நடமாடும் இயக்க க்ரான்	1	18	--	--
	முள்ளுக்கிண்டி ட்ரக்வண்டி இயக்கம்	1	20	--	--
	மின்பிறப்பாக்கிகள் மற்றும் மோட்டார்கள்	1	30	--	--
	கனரக வாகனங்கள் பராமரிப்பு	1	20	--	--
	முள்ளுக்கிண்டி ட்ரக்வண்டி இயக்கம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்	1	20	--	--
05	**பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட பாடநெறிகள் (BSE)**				
	கட்டிட தானியக்க முறைமைகள்	1	30	1	12
	மின்தூக்கிகள் மற்றும் உயர்த்தும் சாதனங்கள் பராமரிப்பு	1	30	1	15
	கட்டிடத்தின் மின்சார முறைமை வடிவமைப்பு	1	35	1	39
	அதி உயர் கட்டிடங்களுக்கான குழாய் பொருத்தும் முறைமைகள்	1	30	1	34
	கட்டிடங்களுக்கும் வீடுகளுக்கும் ஆகுசெலவு பயன் வாய்ந்த சிசிரீவி முறைமைகள் வடிவமைப்பு	1	25	1	30
	மழை நீர் சேமிப்பு முறைமை	1	25	1	34
	பசுமைக் கட்டிடங்களின் அறிமுகம்	1	25	1	20
	மின்சார முறைமை வடிவமைப்பு அறிமுகம்	1	15	1	50
	கட்டிடங்களுக்கான AC முறைமைகள் மற்றும் பிரயோகங்கள்	1	15	1	26
	L P எரிவாயு நிறுவுகை பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்	1	15	1	13
	நுவொயில் அணுகுபிரவேச கட்டுப்பாட்டு முறைமைகள்	1	15	1	27
06	**வேலையரங்குகள் மற்றும் கருத்தரங்குகள்**				
	வாகனங்களின் பாதிப்புகளுக்கான தொழில்நுட்ப மதிப்பீடுகள்	1	100	1	28
	பாதுகாப்பு, அறிவு மற்றும் சிக்கனமான வாகனம் ஓட்டல்	1	50	1	6
	நிர்மாண உபகரணங்கள் பராமரிப்பு முகாமைத்துவம்	1	100	1	37
	வடிவமைப்பு, நிர்மாணம் மற்றும் வீதிகளுக்கு காங்றீட்டு இடும் வேலைகள்	1	100	1	78
	நிர்மாண சாதனங்களின் உச்ச செயலாற்றுகை அடைவு	1	100	1	46
	நிர்மாண ஸ்தலங்கள் களஞ்சிய முகாமைத்துவம்	1	100	1	44
	கட்டிட நிர்மாண தொழில்நுட்பத்தில் உள்ள அடிப்படை பொது பிரச்சினைகள் மற்றும் தீர்வுகள்	1	100	1	47
	கட்டிட நிர்மாண ஒழுங்குவிதிகள் மற்றும் எதிர்கால கட்டிட தர நியமங்கள் பற்றிய ஆலோசனை	1	100	1	43
	மொத்தம்	41	1433	29	798

2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சம்பாதித்த வருமானம்

தொழில் வகுதி	வருமானம் (மில்லியன் ரூபா)
பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், வேலையரங்குகள் மற்றும் கருத்தரங்குகள்	5.80
வேலைப்பட்டறை பழுதுபார்ப்பு வேலைகள் மற்றும் ஏனைய வேலையரங்கு சார்ந்த சேவைகள்	4.13
வசதிகளை வாடகைக்கு விடுதல்	1.35
மொத்தம்	11.28

2.6 கைத்தொழில் பயிற்சிப் பிரிவு

எதிர்பாராத மற்றும் இணையற்ற வளர்ச்சி வீதத்தை அடைந்துள்ள நிர்மாணக் கைத்தொழிலின் நிலையான அபிவிருத்திற்கு பயிற்றப்பட்ட மனித வளங்கள் உண்டு என்பதை உறுதிசெய்கின்ற நிர்மாணக் கைத்தொழிலில் அக்கறை உடைய சகல தரப்புகளினதும் திறன்களை விருத்தி செய்யும் முகமாக இந்தக் கைத்தொழில் பயிற்சிப் பிரிவு அர்ப்பணிப்புடன் தொழிற்பட்டு வருகின்றது.

பாரியளவில் அதிகரித்து வருகின்ற இந்த வளர்ச்சியில் பாதகமான தக்கத்தை ஏற்படுத்துகின்ற தேர்ச்சித் தொழிலாளர்களின் பற்றாக்குறையை தற்பொழுது நிர்மாணக் கைத்தொழில் எதிர்நோக்கி வருகின்றது.

பிரதானமாக நிர்மாணக் கைத்தொழிலில் உள்ள உழியர்படையினது திறனை விருத்தி செய்வதைப் பிரதிநிதிப்படுத்தும் இந்தப் பிரிவு கைத்தொழிலிலுள்ள மனித வளங்களை அபிவிருத்தி செய்வதில் தன்னை அர்ப்பணித்துள்ளது.

2021 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்

- **நிர்மாணப் பிரிவு திறன்கள் அபிவிருத்தி**
  (நிர்மாண கைப்பணி வல்லுநர் பயிற்சி ("சிரம சிக்குரு") நிர்மாண பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்
  குறித்த கால வரையறைகளினுள் உயர்ந்த தரமான நியமங்களை பேணும் நிர்மாண கருத் திட்டங்கள் சரியான முறையில் நிறைவு செய்யப்படுவதை பாதிக்கின்ற மேசன்கள், தட்சன்கள், குழாய் பொருத்துநர்கள், தளவோடுகளை பரவும் தொழிலாளர்கள் முதலியோர் போன்ற கைத்தொழிலில் நிர்மாணக் கைப்பணி வல்லுநர்களுக்கு உண்மையான ஒரு பற்றாக்குறை காணப்படும்.

  இந்த நிலைமையை தற்பொழுது அனுபவித்து வரும் நிர்மாண கைத்தொழில் தற்போதைய பற்றாக்குறையை குறுகிய சாத்தியமான ஒரு காலப் பகுதியில் நிவர்த்தி செய்யும் பொருட்டு குறுங்கால பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் தேவையை மீளுறுதி செய்கின்றது.

  நிர்மாணக் கைத்தொழிலில் முதலிடத்தை வகிக்கின்ற நிகைஅசர நிர்மாண கைத்தொழிலில் உள்ள இந்தப் பிரச்சினையை அடையாளப்படுத்தும் முகமாக NAITA, NCASL மற்றும் MCASL ஆகியவற்றின் கூட்டொத்துழைப்பில் "சிரம சிக்குரு" குறுங்கால தொழில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தும் நடவடிக்கையில் ஒரு முக்கிய பங்கை வகித்துள்ளது.

  குறித்த நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தும் பொருட்டு கட்டுமாண, மர வேலை, தளவோடு பதித்தல், கம்பிகள் கட்டுதல் மற்றும் குழாய் பொருத்துதல் ஆகிய கைவினை தொழில் வகுதிகளில் 4000 கப்பணி வல்லுநர்களுக்கு முழு நாடும் உள்ளடங்கும் வகையில் பயிற்சி நடத்தப்படுகின்றது. இந்த பயிற்சி நிமித்தம் தேர்ந்தெடுக்கப்படும் பயிலுநர்களுக்கு பயிற்சி காலத்தில் தமது நாளாந்த செலவுகளை சமாளிக்கும் வகையில் மூன்று மாதங்கள் வரை மாதம் ஒன்றுக்கு 10,000/-ரூபா மாதாந்த கொடுப்பனவும், பாடநெறி நூல்களும், தமது அந்தந்த

தொழில் வகுதிகளுக்கு உரிய கருவிசாதன பொதிகளும், பாதுகாப்பு தலைக்கவசங்களும் மற்றும் பயிலுநர்களை ஊக்குவிக்கும் வகையில் வழங்க அங்கீகரித்த பிரத்தியேக உடைகளும் வழங்கப்படுகின்றன.

❖ **நிர்மாண கைப்பணி வல்லுநர்களை பதிவு செய்தல் மற்றும் கைப்பணி வல்லுநர் அடையாள அட்டைகளை விநியோகித்தல்**

2014 இன் 33 ஆம் இலக்க CID தொழில் சட்டத்திற்கு இணங்க, இனங்காணப் படும் நிர்மாண கைத்தொழில் கருத் திட்டங்களில் ஈடுபடும் சகல நிர்மாண கைத்தொழில் கைப்பணி வல்லுநர்களை CIDA இல் பதிவு செய்து அவர்களுக்கு கைப்பணி வல்லுநர் அடையாள அட்டைகளை விநியோகித்தல் வேண்டும். இவர்களுக்கு நிர்மாணக் கைத்தொழலில் உரிய அங்கீரத்தை வழங்கவும் இவர்களின் திறனை விருத்தி செய்து அந்த திறன் மட்டத்தை மேம்படுத்தவும் "தேர்ச்சிபெற்ற நபர்களை" பதிவு செய்வது தொடர்பாக இந்த சட்டத்தில் ஏற்பாடுகள் காணப்படுகின்றன. கீழே காணப்படுகின்ற இரண்டு பிரதான பிரிவுகளில் பதிவு மேற்கொள்ளப்படுகின்றது.

I. தேர்ச்சிபெற்ற நிர்மாண கைத்தொழில் கைப்பணி வல்லுநர்
II. நிர்மாண ஸ்தல மேற்பார்வையாளர்கள், நடுத்தர தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் நிர்மாண கைத்தொழிலில் உள்ள ஏனைய தொழில்தேர்ச்சியாளர்கள்

நிர்மாண கைப்பணி வல்லுநர் (கட்டுமாணம்), மின்னியலாளர், மரவேலை கைப்பணி வல்லுநர் (நிர்மாணம்), குழாய் பொருத்துநர், மரவேலை கைப்பணி வல்லுநர் (தளபாடம்), கம்பி வளைப்பவர், தளவோடு பதிப்பவர், ஓட்டுநர், நிறம் தீட்டுநர் (கட்டிடங்கள்), அலுமினியம் நிர்மாண பொருத்துநர் மற்றும் ஏனைய வளர்ந்து வருகின்ற கைப்பணி வல்லுநர்கள் போன்ற 11 கைப்பணி வல்லுநர் வகுதிகளில் இனங்காணக் கூடிய தேர்ச்சிபெற்ற நிர்மாணக் கைப்பணி வல்லுநர்களுக்கு கைப்பணி வல்லுநர் அடையாள அட்டைகள் வழங்கப்படுதல் வேண்டும். கைப்பணி வல்லுநர் மற்றும் தலைமை கைப்பணி வல்லுநர் போன்ற இரண்டு பிரதான தரங்களில் இந்த அடையாள அட்டைகள் வழங்கப் படுகின்றன. இந்தப் பதிவுக்காகவும் மற்றும் கைப்பணி வல்லுநர் அடையாள அட்டைகளை பெறுவதற்காகவும் எற்கனவே 18,000 எண்ணிக்கைக்கும் அதிக விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

உரிய ஒழுங்குவிதிகள் ஏற்கனவே விளமபரப்படுத்தப்பட்டுள்ளன. விதிகளை முடிவு செய்தல் தற்பொழுது நிகழ்ந்து வருகின்றது. உரிய ஒழுங்குவிதிகள் வெளியிடப்பட்டவுடன் கைப்பணி வல்லுநர்களின் உத்தியோகபூர்வப் பதிவு ஆரம்பமாகும்.

2.7 வீடமைப்பு திட்டமிடுகைக்கும் கட்டிடத்திற்குமான நிலையம்





வீடமைப்புத் திட்டமிடுகைக்கும் கட்டிடத்திற்குமான நிலையமானது (CHPB) பல பிரிவுகளுக்கு என மூன்றாம்நிலை கல்வி மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்வி ஆணைக்குழுவின் கீழ் POI/054 ஆம் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு ISO 9001:2015 தர சான்றிதழ் பெற்ற ஒரு நிறுவனமாகும். இது கைநிஅசு முகாமை நியாயாதிக்கத்தின் கீழ் வருகின்ற ஒரு நிறுவனமாகும். CHPB நிலையம், இல. 33, பாராளுமன்ற வீதி, பெலவத்த, பத்தரமுல்ல என்ற இடத்தில் அமைந்துள்ளது. தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் தொழில்தேர்ச்சியாளர்கள் ஆகியோரின் தொழில் அபிவிருத்தியில் இலக்குக்கொள்கின்ற பாடநெறிகளை துல்லியமாக CHPB நிலையம் நடத்தி வருகின்றது. இந்த தொழில்நுட்ப கருத்தரங்களுக்கு கிடைத்துள்ள மதிப்புமிக்க பிரதிபலிப்பு, மிகப் பெறுமதியான பாடநெறிகளை நடத்துவதில் CHPB நிலையத்தின் தொழில்தேர்ச்சிக்கு ஒரு சான்றாக உள்ளது.

CHPB நிலைய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

CHPB நிலையம் நிர்மாண மற்றும் கனிய அளவையியல் பிரிவுகளுக்கான இடைவெளி நிரப்பும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை வழங்கி வருகின்றது. நிர்மாணக் கைத்தொழிலில் ஆர்வம் உடைய பாடசாலையை விட்டும் விலகி செல்லுபவர்கள், நிறைவேற்றுநர்கள், பொறியியலாளர்கள், ஆதரவாளர்கள், நிர்மாண முகாமையாளர்கள் ஆகியோர் எமது பிரதான இலக்குக் குழுவில் அடங்குகின்றனர்.

மேற்பார்வையாளராக நிலக்காட்சிப்படுத்தல் பிரிவுகளில் நுழைய விரும்பும் ஆர்வம் உடைய இளைஞர்களுக்கும் பாடசாலையை விட்டு விலகிச்செல்லும் நபர்களுக்கும் உரிய நிலக்காட்சிப்படுத்தல் அபிவிருத்தி உதவியாளர் (NVQ 4) பாடநெறி வடிவமைக்கப்படுகின்றது.
கைத்தொழில் பிரிவில் குறிப்பாக அதாவது இரண்டு வகுதிகளின் கீழ் உள்ளக வடிவமைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்படுகின்றன. மேலும் பாடசாலை விட்டு விலகுபவர்களுக்கான உள்ளக அலங்கரிப்பாளர் (NVQ 4) பாடநெறியும் மற்றும் உள்ளக வடிவமைப்பு பாடநெறியும் பிரதானமாக உள்ளக வடிவமைப்பு தொழில்தருநர் பிரிவில் இலக்குக்கொள்கின்றன.



NVQ மற்றும் டிப்ளோமா பாடநெறி வகுதிகளின் கீழ் கணிய அளவை நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டது. கணிய அளவை டிப்ளோமா பாடநெறி திறமை வாய்ந்த நிர்மாண வேலை மேற்பார்வையாளர்கள், தொழில் நுட்ப உத்தியாகத்தர்கள், உதவி கணிய அளவையியலாளர்கள் மற்றும் அக்கறை உடைய தரப்புகள் ஆகிய குழுக்களில் இலக்குக்கொள்ளும். கணிய அளவை சான்றிதழ் (NVQ 4) மற்றும் கணிய

அளவை தேசிய பாடநெறி (NVQ 5) ஆகிய பாடநெறிகள் தேசிய வாழ்க்கைத்தொழில் தகைமை பாடவிதானத்தின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளன.

மேற்குறித்த நிகழ்ச்சித் திட்டங்கள் 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நடத்தப் பட்டன. செயன்முறை கணிய அளவைகள் பற்றிய அறிவையும் திறமையும் மேம்படுத்தும் நன்மை கருதி குறித்த பாடநெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

❖ **நிர்மாணக் கைத்தொழில் சம்பந்தமான கணனி பாடநெறிகள்**

நிர்மாணக் கைத்தொழில் சம்பந்தமான மூன்று வகைக் கணனிப் பாடறிகள் 2021 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டன.

17 பேர் பங்குபற்றிய 01 MS கருத் திட்டப் பாடநெறி நிகழ்ச்சித் திட்டம்

- 13 பேர் பங்குபற்றிய 01 ஒட்டோ கெட் பாடநெறி நிகழ்ச்சித் திட்டம்

CHPB நிலையம் 2021 ஆம் ஆண்டிற்கு பின்வருவன போன்ற குறுங்கால பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியுள்ளது.

- QS பிரிவுக்கான MEP கனிய அளவை
  22 பங்குபற்றுநர்கள் அடங்கிய 01 நிகழ்ச்சித் திட்டம்

- QS பிரிவுக்கான தடைத் திட்டத்தைத் தயாரித்தல்
  26 பங்குபற்றுநர்கள் அடங்கிய 01 நிகழ்ச்சித் திட்டம்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கருத் திட்டங்களில் பணியாற்றுகின்ற நிர்மாணக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள பொறியியலாளர்களுக்கும், கருத் திட்ட முகாமையாளர்களுக்கும் இது பயனுள்ளதாக இருந்தது.

ஊழியர்களின் தகுதியை மேம்படுத்துவதற்கான மேலதிகப் பயிற்சிப் பாடநெறிகள்

நிர்மாணத் தொழிலாளர்கள், மேற்பார்வையாளர்கள், பொறியியலாளர்கள் தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள், நிறைவேற்று உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில்வாண்மையாளர்கள் ஆகியோரின் தகுதியை மேம்படுத்தும் முகமாக மேலும் பயிற்சிப் பாடநெறிகள் திட்டமிடப்பட்டுள்ளன. இந்தப் பாடநெறிகளை பின்பற்றுவதற்கு கைத்தொழில் அனுபவமும் தேவையான தகைமைகளும் அவசியமாகும்.

❖ **வழமையாக திட்டமிடப்படும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் / குறுங்காலப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்**

நிர்மாணம் சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களிடம் இருந்து கிடைத்த விஷேட பயிற்சித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு பொருத்தமான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை CHPB நிலையத்தால் வடிவமைத்து வழங்க முடிந்துள்ளது.

- தடை அட்டவணை தயாரித்தலுடன் கூடிய கட்டுமாண வடிவமைப்பு - ஊவா மாகாண சபை (30 பங்குபற்றுநர்கள்)
- விலை ஏற்றத்தாழ்வு சூத்திரம் - கட்டிடத் திணைக்களம், ஊவா மாகாண சபை (20 பங்குபற்றுநர்கள்)
- பெறுகை செயல்முறையுடன் கூடிய BOQ தயாரிப்பு - சிறைச்சாலைகள் திணைக்களம் (39 பங்குபற்றுநர்கள்)
34.	கட்டிடங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு	47,575.00							47,575.00
35.	பயணிகள் வாகங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு		850.00	7,800.00					8,650.00
36.	ஏனைய வாகங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு	3,500.00							3,500.00
37.	சம்பளங்கள் மற்றும் வேதனாதிகள்		4,162,973.75						4,162,973.75
38.	சிப்ப சவிய கருவிசாதன பொதிகள்		1,139,796.90	5,156,285.95					6,296,082.85
39.	காகிதாதிகள்	320.00	24,855.00	37,201.71					62,376.71
40.	தொலைபேசி கட்டணங்கள்		(788.84)	37,341.38					36,552.54
41.	பயிற்சி உதவு பொருட்கள்								-
42.	பயிற்சி நூல்கள்						56,390.00		56,390.00
43.	பிரயாண செலவு (உள்நாட்டு)	350.00	68,390.00	124,981.00					193,721.00
44.	பிரயாண செலவு (வருமானம் ஈட்டல்)								-
45.	பயிலுநர்களுக்கான சீருடைகள்		1,177,815.00	5,692,190.00					8,870,005.00
	மொத்தம்	**481,014.00**	**21,949,298.92**	**50,876,659.41**	**6,823,656.00**	**250,240.00**	**56,390.00**	**-**	**80,437,258.33**

இது வரவுசெலவுத்திட்ட நிதி ஒதுக்கீடுகளுக்கு இணங்க 2021 ஆம் ஆண்டில் பொது தனியார் பங்காளித்துவ மாதிரி நிகழ்ச்சித் திட்டத்துடனான நிர்மாண கைத்தொழிலுக்கான திறன்கள் பயிற்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ள 200,000,000.00 ரூபா மூலதன கட்டுநிதியாகும். இதில் 21,949,298.92 ரூபா 2021 ஆம் மேற்குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் நிமித்தம் செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும் 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் முறையே 2020,2019 ,2018 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ரூ.50,876,659.41 ,ரூ.6,823,656.00,250,240.00 மற்றும் ரூ.56,390 தொகைகளும் செலவு செய்யப்பட்டுள்ளன.

இல.	விவரம்	2021				
		154 மில்லியன் நிகழ்ச்சித் திட்டம்	300 மில்லியன் நிகழ்ச்சித் திட்டம்	250 மில்லியன் நிகழ்ச்சித் திட்டம்	93 மில்லியன் நிகழ்ச்சித் திட்டம்	500 மில்லியன் நிகழ்ச்சித் திட்டம்
		(ரூ.)	(ரூ.)	(ரூ.)	(ரூ.)	(ரூ.)
1.	விளம்பரம் மற்றும் பிரசுரித்தல்	160.00	4,400.00	-	-	-
2.	பயிலுநர்களின் நாளாந்த தினவரவு புத்தக செலவுகள்	-	-	-	-	-
3.	வங்கி கட்டணங்கள்	-	-	-	-	-
4.	மிகையூதிய கொடுப்பனவுகள்	-	-	-	-	-
5.	புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள்	2,310.00	-	-	-	-
6.	பயிலுநர்களுக்கான காசு கொடுப்பனவுகள்	8,310,825.00	48,869,825.00	-	-	-
7.	வாழ்க்கைச்செலவு கொடுப்பனவு	780,780.00	72,800.00	-	-	-
8.	நாளாந்த செலவுகள் மற்றும் தங்குமிடவசதி செலவுகள்	-	1,125.00	-	-	-
9.	அபிவிருத்தி செலவுகள்	4,000.00	-	-	-	-
10.	ஊ.சே.நி.	741,941.56	73,651.98	-	-	-
11.	ஊ.ந.நி.	148,388.30	14,730.40	-	-	-
12.	கண்காட்சிகள்	-	-	-	-	-
13.	துணை பதவியணிக்கான கட்டணங்கள் மற்றும் கொடுப்பனவுகள்	2,502,160.00	3,195,060.00	879,360.00	1,059,260.00	1,189,100.00
14.	கற்பித்தல் பதவியணிக்கான கட்டணங்கள் மற்றும் கொடுப்பனவுகள்	724,400.00	3,926,782.00	-	-	-
15.	ஆலோசனை தரப்புகளுக்கான கட்டணங்கள் மற்றும் கொடுப்பனவுகள்	-	64,950.00	-	-	-
16.	பயணிகள் வாகனங்களுக்கான எரிபொருள் மற்றும் ஓட்ட செலவுகள்	65,820.00	394,274.00	-	-	-
17.	ஏனைய வாகனங்களுக்கான எரிபொருள் மற்றும் ஓட்ட செலவுகள்	-	-	-	-	-
18.	மண்டப கட்டணங்கள்	-	-	-	-	-
19.	உபகரணங்கள் வாடகைக்கு பெறல்	-	-	-	-	-
20.	சுகாதாரம் மற்றும் துப்புரவேற்பாடு	17,816.00				
21.	தங்குமிடவசதி	43,000.00	688,540.00	-	-	-
22.	நானாவித செலவுகள்	1,000.00	3,650.00	-	-	-
23.	அலுவலக தேவைகள்	-	-	-	-	-
24.	ஏனைய கொடுப்பனவுகள்	300,000.00	24,000.00	-	-	-
25.	ஏனையவை - பயிற்சி	-	-	-	-	-
26.	மேலதிகநேர மற்றும் விடுமுறைநாள் கொடுப்பனவு (I)	-	-	-	-	-
27.	மேலதிகநேர/விடுமுறைநாள் கொடுப்பனவுகள்	122,171.02	618,589.92	-	-	-

28.	நிழல்பிரதியெடுத்தல் செலவுகள்	37,581.69	5,757.00	-	-	-
29.	தபால் கட்டணங்கள்	164,250.00	40,828.00	-	-	-
30.	அச்சீடு, தட்டெழுத்து மற்றும் மொழிபெயர்ப்பு	-	-	-	-	-
31.	பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான தாகசாந்திகள்	438,600.00	578,875.00	-	-	-
32.	வழமையான தாகசாந்திகள்	129,941.00	619,985.50	-	-	-
33.	குத்தகை வாடகை கட்டணங்கள்	-	140,286.00	-	-	-
34.	கட்டிடங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு	-	-	-	-	-
35.	பயணிகள் வாகங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு	-	3,150.00	-	-	-
36.	ஏனைய வாகங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு	-	-	-	-	-
37.	சம்பளங்கள் மற்றும் வேதனாதிகள்	4,165,497.02	562,914.25	-	-	-
38.	சிப்ப சவிய கருவிசாதன பொதிகள்	-	3,920,000.00	-	-	-
39.	காகிதாதிகள்	4,515.05	275.00	-	-	-
40.	தொலைபேசி கட்டணங்கள்	105,258.25	49,527.88	-	-	-
41.	பயிற்சி உதவு பொருட்கள்	-	-	-	-	-
42.	பயிற்சி நூல்கள்	3,537,840.00	322,590.00	-	-	-
43.	பிரயாண செலவு (உள்நாட்டு)	53,250.00	379,004.20	-	-	-
44.	பிரயாண செலவு (வருமானம் ஈட்டல்)	-	900.00	-	-	-
45.	பயிலுநர்களுக்கான சீருடைகள்	-	-	-	-	-
	மொத்தம்	**22,401,504.89**	**64,576,471.13**	**879,360.00**	**1,059,260.00**	**1,189,100.00**

குறிப்பு இலக்கம்: 24 ஊழியர் வேதனாதிகள்

இல.	விவரம்	2021	2020
		(ரூ.)	(ரூ.)
1.	சம்பளங்கள் மற்றும் வேதனாதிகள்	107,010,075.43	120,019,584.36
2.	வாழ்க்கைச்செலவு கொடுப்பனவு	21,115,997.25	22,899,942.69
3.	பங்குபற்றல் ஊக்குவிப்பு தொகை	9,000,334.29	9,779,199.41
4.	சுகாதார கொடுப்பனவு	111,900.00	126,100.00
5.	பதில் கடமை கொடுப்பனவு	1,076,275.50	810,619.14
6.	ஏனைய கொடுப்பனவுகள்	7,513,789.62	8,324,768.06
7.	மேலதிகநேர/விடுமுறை நாள் கொடுப்பனவு	16,540,771.91	16,250,037.81
8.	மேலதிகநேர மற்றும் விடுமுறை நாள் கொடுப்பனவு (I)	1,602,953.63	1,495,438.69
9.	தொழில் சபைக்கான உறுப்புரிமை சந்தாப்பணம்	75,961.00	77,411.00
10.	மிகைவூதிய கொடுப்பனவுகள்	3,106,331.50	3,366,225.00
11.	ஊ.சே.நி.	19,160,591.08	21,068,959.80
12.	ஊ.ந.நி.	3,832,118.27	4,213,791.90
13.	ஓய்வூதிய பணிக்கொடை	6,561,233.50	17,208,952.50
	மொத்தம்	**196,708,332.98**	**225,641,030.36**

குறிப்பு இலக்கம்: 25 பிரயாண செலவுகள்

இல.	விவரம்	2021	2020
		(ரூ.)	(ரூ.)
1.	பிரயாண செலவு (உள்நாட்டு)	913,495.43	1,186,197.56
2.	பிரயாண செலவு - (வருமானம் ஈட்டும்)	391,065.00	573,310.00
3.	பிரயாண செலவு (வெளிநாட்டு)		-
	மொத்தம்	**1,304,560.43**	**1,759,507.56**

குறிப்பு இலக்கம்: 26 வழங்கல்கள் மற்றும் தேவைகள்

இல.	விவரம்	2021	2020
		(ரூ.)	(ரூ.)
1.	புகைப்படப்பிரதியெடுத்தல் செலவுகள்	5,520,202.03	4,264,209.73
2.	காகிதாதிகள்	663,275.92	370,590.79
3.	தேவையான அலுவலக பொருட்கள்	71,075.06	292,692.06
4.	அச்சீடு, தட்டெழுத்து, மொழிபெயர்ப்பு	564,389.50	147,662.81
5.	நூல்கள் மற்றும் வாரஇதழ்கள்	534,225.78	375,696.69
6.	அகற்றல் அழித்தல்	-	239,514.17
7.	கட்புல செவிப்புல நுகர்வுப்பொருட்கள்	39,283.70	7,014.41
	மொத்தம்	**7,392,451.99**	**5,697,380.66**

குறிப்பு இலக்கம்: 27 பராமரிப்பு செலவுகள்

இல.	விவரம்	2021	2020
		(ரூ.)	(ரூ.)
1.	கட்டிடங்கள் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு	926,561.04	539,579.51
2.	தளபாடங்கள், உபகரணங்கள் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு	1,830,353.55	2,651,589.30
3.	பயணிகள் வாகன பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு	2,569,639.47	4,254,529.72
4.	ஏனைய வாகனங்கள் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு	315,510.03	343,421.95
5.	பொறித் தொகுதிகள், எந்திரங்கள், உபகரணங்கள் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு	2,166,893.67	2,923,501.38
6.	கருவி சாதனங்கள் பழுதுபார்ப்பு	1,050.00	111,774.17
7.	ஏனைய உபகரணங்கள் /IT உட்கட்டமைப்பு வசதிகள் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு	43,136.20	747,477.90
8.	காப்புறுதி - (வாகனங்கள்)	2,218,710.04	2,839,477.13
	மொத்தம்	**10,071,854.00**	**14,411,351.06**

குறிப்பு இலக்கம்: 28 எரிபொருள் மற்றும் பொது வசதி கொடுப்பனவுகள்

இல.	விவரம்	2021	2020
		(ரூ.)	(ரூ.)
1.	பயணிகள் வாகனங்களின் எரிபொருள் மற்றும் ஓட்ட செலவுகள்	6,743,190.22	5,734,214.80
2.	ஏனைய வாகனங்களின் எரிபொருள் மற்றும் ஓட்ட செலவுகள்	3,072,600.59	755,379.35
3.	வாடகை மற்றும் வாடகை கட்டணங்கள்	111,254.46	234,686.49
4.	தபால் கட்டணங்கள்	694,669.00	1,523,314.61
5.	தொலைபேசி கட்டணங்கள்	2,209,154.65	2,815,905.46
6.	இன்டர்நெட்டு கட்டணங்கள்	452,955.70	305,412.21
7.	மின்சார கட்டணங்கள்	5,305,005.17	7,745,250.95
8.	தண்ணீர் கட்டணங்கள்	747,051.41	929,900.70
9.	சுகாதார மற்றும் துப்புரவேற்பாட்டு கட்டணங்கள்	4,995,915.48	5,628,432.14
10.	பாதுகாப்பு சேவைகள்	5,933,550.00	5,894,822.20
	மொத்தம்	**30,265,346.68**	**31,567,318.92**

குறிப்பு இலக்கம்: 29 ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் பயிற்சி செலவுகள்

இல.	விவரம்	2021	2020
		(ரூ.)	(ரூ.)
1.	மீளப்புதுப்பித்தல் கட்டணம் -TVEC	-	80,981.92
2.	புலமைப்பரிசில் மற்றும் பயிற்சி (உள்நாட்டு)	44,400.00	61,650.00
3.	ஆலோசனையாளர்களுக்கான கட்டணங்கள் மற்றும் கொடுப்பனவுகள்	209,000.00	169,050.00
4.	கற்பிக்கும் பதவியணிக்கான கட்டணங்கள் மற்றும் கொடுப்பனவுகள்	5,495,769.83	7,884,820.00
5.	துணைப் பதவியணிக்கான கட்டணங்கள் மற்றும் கொடுப்பனவுகள்	-	5,000.00
6.	அபிவிருத்தி ஆகுசெலவு	-	9,000.00
7.	பயிற்சி நூல்கள்	27,647.54	27,235.45
8.	பயிற்சிக்கான எரிபொருள் செலவு	280.00	219,669.35
9.	கைக்கருவிகள் மற்றும் சிறு உபகரணங்கள்	16,696.33	26,389.68
10.	பயிலுநர்களுக்கான சீருடைகள்	1,170,232.81	1,288,764.11
11.	பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான தாகசாந்திகள்	1,777,241.67	4,295,125.00
12.	ஏனையவை - பயிற்சி	10,715.00	1,500.00
13.	பயிற்சிக்கான காசுக் கொடுப்பனவுகள்	945,250.00	1,830,750.00
14.	உபகரணங்கள் வாடகைக்கு பெறல்	1,500.00	47,000.00
15.	மண்டப கட்டணங்கள்	166,200.00	618,830.00
16.	வருடாந்த மீளப்புதுப்பித்தல் கட்டணங்கள் – Acc. soft Package	140,772.97	-
17.	N.V.Q. செலவுகள்	9,300.00	-
	மொத்தம்	**10,015,006.15**	**16,565,765.52**

குறிப்பு இலக்கம்: 30 நிதிசார் செலவு

இல.	விவரம்	2021	2020
		(ரூ.)	(ரூ.)
1.	வங்கி கட்டணங்கள்	161,683.00	163,290.00
2.	குத்தகை வட்டி - நிதிசார் குத்தகை	2,288,033.46	3,015,403.83
	மொத்தம்	**2,449,716.46**	**3,178,693.83**

குறிப்பு இலக்கம்: 31 தேய்மானம்

முழுமையாக தேய்மானம் கணிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், பொறித் தொகுதிகள், உபகரணங்கள்

2021 ஆம் ஆண்டிற்கு கணிக்கபட்ட மொத்த தேய்மானம் ரூ. 92,191,914.96 தொகையாகும். இது முழுமையாக தேய்மானம் கணிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் தொகையாகும். இவை அறிக்கையிடப்படும் திகதி வரை பாவிக்கப்படுகின்ற சொத்துக்களாகும். இவை பின்வருமாறு காணப்படும்:

	சொத்துக்கள் வகை	2021	2020
		(ரூ.)	(ரூ.)
*	வாசிகசாலை நூல்கள் - CETRAC	911,066.73	786,270.00
*	வாசிகசாலை நூல்கள் - தலைமை அலுவலகம்	1,291,445.48	1,216,921.48
*	கருவிகள் மற்றும் உபகரணங்கள்	19,592,316.38	17,833,504.77
*	தளபாடங்கள், பொருத்துக்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்	73,358,018.17	55,651,616.23
*	கட்புல செவிப்புல சாதனங்கள்	5,960,293.73	4,330,649.58
	மொத்தம்	**101,113,140.49**	**79,818,962.06**

குறிப்பு இலக்கம்: 32 ஏனைய செலவுகள்

இல.	விவரம்	2021 (ரூ.)	2020 (ரூ.)
1.	N.B.T.	-	-
2.	ஊழியர்களுக்கான சீருடைகள்	1,582,860.15	605,366.46
3.	ஊழியர்களுக்கான தேநீர் செலவு	709,000.80	1,163,382.50
4.	சுகாதார காப்புறுதி	2,984,484.79	3,167,000.00
5.	ஏனையவை	-	1,419,179.62
6.	நலன்புரி விடயங்கள்	46,100.00	132,000.00
7.	கண்காட்சிகள்	46,172.69	-
8.	பிரசுரமும் மற்றும் விளம்பரமும்	5,248,022.54	1,890,953.35
9.	தாகசாந்திகள்	414,602.13	865,813.08
10.	ஆசன கொடுப்பனவுகள்	2,565,180.00	1,415,400.00
11.	கணக்காய்வு கட்டணம்	816,025.00	935,167.00
12.	சட்டமுறையான கட்டணங்கள்	108,140.00	74,425.00
13.	அனுமதிப் பத்திர கட்டணங்கள்	486,391.41	379,309.29
14.	நானாவித செலவுகள்	444,629.56	53,944.00
15.	வாடகை மற்றும் வரிகள்	499,800.82	-
16.	குத்தகை கழிவு	32,613.64	32,613.64
17.	தங்குமிடவசதி	5,302,650.00	3,520.00
18.	சந்தேகத்திற்கிடமான பற்றுக்குகளுக்கான குறைந்த ஏற்பாடு	-	712,895.88
19.	நிர்மாண சிறப்பு செலவுகள்	-	228,115.00
20.	ISO வருடாந்த கட்டணம்	-	97,959.20
21.	ஊ.சே.நி. நஷ்டஈடு	-	2,695,954.44
22.	ஊ.ந.நி. நஷ்டஈடு	-	21,966,287.50
23.	இயக்கச்செயற்பாட்டு குத்தகை	200,000.00	200,000.00
24.	தொழில்நுட்ப கணக்காய்வாளர்களுக்கான கட்டணங்கள் மற்றும் கொடுப்பனவுகள்	123,600.00	-
25.	இடைநேர் செலவுகள்	1,956,538.35	-
	மொத்தம்	**23,566,811.88**	**38,039,285.96**

குறிப்பு இலக்கம்: 33

திறைசேரி மானிய மூலதனம் - (பயிற்சி நிலையங்களின் பராமரிப்பு மற்றும் புனரமைப்பு, நிர்மாண உபகரண எந்திரவியல்கள் பாடநெறி) மற்றும் மூலதனத்திற்கான திறைசேரி கட்டுநிதி - (பொது தனியார் பங்காளித்துவ மாதிரி நிகழ்ச்சித் திட்டங்களுடன் கூடிய நிர்மாண கைத்தொழிலுக்கான திறன்கள் பயிற்சி) ஆகியவற்றுக்கு நிதி அமைச்சின் மூலதன செலவின தலைப்பின் கீழ் நிதி அளிக்கப்படுகின்றது. மேலும் உரிய ஆண்டில் ஏற்பட்ட மூலதன செலவினங்களும் மற்றும் வருமானமும் உரிய ஆண்டில் ஒரு நியாயமான அடிப்படையில் ஒரு சம தொகையில் இனங்காணப்படுதல் வேண்டும். அத்தகைய வருமானமும் மற்றும் செலவினமும் CIDA கணக்கீட்டுக் கொள்கைக்கு (மூலதன மானியங்கள்) இணங்க உரிய ஆண்டின் வருமான கூற்றில் தனித்தனியாக எடுத்துரைக்கப்படுதல் வேண்டும்.

குறிப்பு இலக்கம்: 34 காசும் மற்றும் வங்கியும்

குறுங்கால வபைபுக்கள் அதிகார சபையின் உடனடி காசு தேவைப்படுகளை பொறுத்து வித்தியாசமான காலப் பகுதிற்கு அந்தந்த குறுங்கால வைப்பு வீதங்களில் வருமானம் ஈட்டப்படுகின்றது.

அதிகார சபைக்கு வங்கியில் உள்ள நிலுவை தொகை 456.15 மில்லியன் ரூபாவாகும். அபிவிருத்தி கருத் திட்டங்களில் பயன்படுத்த வேண்டிய 184.96 மில்லியன் ரூபா தொகையும் இதில் அடங்குகின்றது.

குறிப்பு இலக்கம்: 35 பொருள் இருப்புக்கள்

பொருள் இருப்புக்கள் ஆகுசெலவு அடைப்பயில் எடுத்துரைக்கப்படுகின்றன. உதிரிப்பாகங்கள், பராமரிப்பு பொருட்கள், சுத்தம் செய்யும் பொருட்கள், காகிதாதிகள் மற்றும் ஏனைய நுகர்வுப் பொருட்கள் முதலியன பொருள் இருப்புக்களில் அடங்குகின்றன. பொருட்கள் சராசரி ஆகுசெலவு முறையியலில் விநியோகிக்கப்படுகின்றன. இறுதியில் உள்ள பொருட்களும் சராசரி ஆகுசெலவு முறையியலை பிரயோகித்து விலைமதிக்கப்படுகின்றன.

குறிப்பு இலக்கம்: 36 அறிக்கையிடும் திகதிற்கு பின்னர் நிகழும் நிகழ்வுகள்

2021 திசம்பர் 31 ஆம் திகதிற்கான நிதிக் கூற்றுக்களுக்கு பொருண்மையான தாக்கத்தை உடைய அறிக்கையிடும் திகதிற்கு பின்னர் நிகழும் எந்தவிதமான நிகழ்வும் நிகழவில்லை.

குறிப்பு இலக்கம்: 37 நிதியேற்பாடுகள், இடைநேர் பொறுப்புக்கள் மற்றும் இடைநேர் சொத்துக்கள்

a.

வழக்குகள் அவற்றின் தன்மை மற்றும் நிலை முதலிய விபரங்களுடன் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. 2020 திசம்பர் 31 ஆம் திகதிற்கு குறிப்பிட வேண்டிய பின்வரும் வழக்குகள் காணப்படுகின்றன.

இலக்கம்	வழக்கை தாக்கல் செய்தவர்	நீதிமன்றம்/நிறுவனம்	நடவடிக்கை	பங்களிப்பு தெகை (ரூ.)	மிகை கட்டணம் (ரூ.)	மொத்தம் (ரூ.)
1.	CIDA ஊழியர்களை உள்ளடக்கிய 'ஜாத்திக்க சேவக்க சங்கமய'	தொழிலாளர் திணைக்களம், கொழும்பு	2006.01.01 ஆம் திகதி முதல் 2011.06.01 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் ICTAD ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய ஊ.சே.நி. நிலுவைகள்	14,977,525/-	7,488,762.50	22,466,287.50
2.	கட்டடக்கலைஞர் எச்.கே. பாலசந்திர	ஊழியர் நம்பிக்கை நிதிய சபை	சேவை முடிவுறத்தல் - விளம்பல் கட்டத்தில் உள்ளது	1,906,538.35	50,000.00	1,956,538.35
3.	திருமதி ஜி.என்.என். குமுது ஜயக்கொடி	தொழிலாளர் திணைக்களம், கொழும்பு	தொழில் நிபந்தனைகள் பற்றிய விசாரணை			
4.	ரிட் ஆணை விண்ணப்பம் - ஆலோசனை கம்பனி	மேன்முறையீட்டு நீதிமன்றம்	நாம் தாக்கல் செய்த மனு - ஆலோசனை தாபனங்கள் பதிவு ஆதரவு			
			மொத்த தொகை			**24,422,825.85**

உரிய சீராக்கல்கள் நிதியேற்பாடுகள், இடைநேர் பொறுப்புக்கள் ஆகியன பற்றிய இலங்கை அரச துறை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

b. நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான பெலவத்தை பத்தரமுல்ல காணி (1993.11.30 ஆம் திகதிய 1011 ஆம் இலக்க நிலஅளவைத்திட்டத்திலும் மற்றும் 1993.11.30 ஆம் திகதிய 1010 ஆம் இலக்க நிலஅளவைத்திட்டத்திலும் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணித்துண்டு இலக்கம் 1 மற்றும் காணித்துண்டு இலக்கம் 1) 99 ஆண்டு இயக்கச் செயற்பாட்டு குத்தகை அடிப்படையில் பெறப்பட்டுள்ளது. இந்த காணியின் நிமித்தம் இரு தரப்புகளும் குத்தகை ஒப்பந்தத்தை செய்துள்ளன.

குறிப்பு இலக்கம்: 38 குத்தகை

பின்வரும் சொத்துக்கள் நிதிசார் குத்தகை அடிப்படையில் 2019 ஆம் ஆண்டு சனவரி மாத்தில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இலக்கம்	சொத்துக்கள் வகை	செலவு (ரூ.)	அறிக்கையிடப் படும் திகதிற்கான தேய்மான ஏற்பாடு	தேறிய கொணரப்படும் பெறுமானம்	குத்தகை காலம்	குத்தகைதாரர்
1.	MITSUBISHI - கார்	11,035,490.00	4,138,308.75	6,897,181.25	05 ஆண்டுகள்	இலங்கை வங்கி
2.	MITSUBISHI - கார்	11,035,490.00	4,138,308.75	6,897,181.25	05 ஆண்டுகள்	இலங்கை வங்கி
3.	MITSUBISHI - கார்	11,035,490.00	4,138,308.75	6,897,181.25	05 ஆண்டுகள்	இலங்கை வங்கி
	மொத்தம்	**33,106,470.00**	**12,414,926.25**	**20,691,543.75**		

இயக்கச்செயற்பாட்டு குத்தகை

பின்வரும் சொத்துக்கள் இயக்கச்செயற்பாட்டு குத்தகை அடிப்படையில் பெறப்பட்டுள்ளன.

இலக்கம்	சொத்துக்கள் வகை	செலவு (ரூ.)	அறிக்கையிடப் படும் திகதிற்கான தேய்மான ஏற்பாடு	தேறிய கொணரப்படும் பெறுமானம்	குத்தகை காலம்	குத்தகைதாரர்
1.	குடியிருப்பு திட்டமிடுகை அபிவிருத்தி நிலையம்	2,851,477.20	503,295.48	2,348,181.72	99 ஆண்டுகள்	நகர அபிவிருத்தி அதிகார சபை
2.	நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை - தலைமை அலுவலகம்	-	ஆண்டொன்றுக்கு 200,000.00	-	30 ஆண்டுகள்	டவர் ஹோல் தியட்டர் மண்டபம்
	மொத்தம்	**2,851,477.20**	**503,295.48**	**2,348,181.72**		

குறிப்பு இலக்கம்: 39 நிகழும் மூலதன பணி

அறிக்கையிடப்படும் ஆண்டிற்கு கருத்திற்கொள்ளக்கூடிய நிகழும் மூலதன பணிகள் எதுவும் கிடையாது.

குறிப்பு இலக்கம்: 40 - 13 ஆண்டு உத்தரவாத NVQ பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்

குறித்த ஆண்டு காலப் பகுதியில் 13 ஆண்டு உத்தரவாத NVQ பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்கு 7,645,440.44 ரூபா தொகை செலவு செய்யப்பட்டது.

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது எண்: CAE/B/CIDA/FA/2021/11

தேதி: 28 ஜூன் 2022

தலைவர்
நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை

2021 திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகள் பற்றி 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி வெளியிடும் கணக்காய்வு

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை இன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது

நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமானதாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தின் அடிப்படை**

(a) **இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் (எஸ்.எல். பி. எஸ்.ஏ.எஸ்) 9 – சரக்கிருப்பு :** ஆண்டின் இறுதியில் பௌதீக இருப்புக் கணக்கெடுப்பை அவதானிக்க முடியாதிருந்ததுடன் சுயாதீன உறுதிப்படுத்தல்கள் இல்லாத காரணத்தால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 149,490,346 பெறுமதியான சரக்கிருப்பின் கிடைக்கக்கூடிய தன்மையை மாற்று முறைகளிலேனும் மெய்மையாய்வு செய்து திருப்தி அடையவில்லை. இந்தத் தொகையில் உதிரிப்பாகங்கள் மற்றும் கருவிகள், விற்கப்படாத வெளியீடுகள் மற்றும் ஏனைய எழுதுகருவிப் பொருட்களின் பெறுமதிகள் உள்ளடங்கி யுள்ளது.

இதனிடையே, உதிரிபாகங்கள் மற்றும் கருவிகள் போன்ற பயிற்சிப் பொருட்களை பிரதான இருப்புகளிலிருந்து வேறுபடுத்தி ஆண்டுதோறும் மீள்மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு 2012 ஆகஸ்ட் 06 அன்று நடைபெற்ற பொது முயற்சிகளுக்கான குழு (COPE) கூட்டத்தில் அதிகாரசபையின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2021 திசெம்பர் 31 வரையிலும் இந்த அறிவுறுத்தல்களுடன் இணங்கியொழுகுவதற்கு அதிகாரசபை தவறியிருந்தது. மேலும், தேவையற்ற பொருட்களை குழுவொன்றின் மூலம் அடையாளம் கண்டு அப்புறப்படுத்துவதாக அக்கூட்டத்தில் உறுதியளிக்கப்பட்டிருந்த போதிலும், 2022 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் அதிகாரசபை அதற்கேற்ப செயற்பட்டிருக்கவில்லை. மேற்கூறியவை காரணமாக, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 149 மில்லியன் பெறுமதியான சரக்கிருப்பின் சரியான தன்மை மற்றும் நியாயமான பெறுமதி குறித்து அபிப்பிராயம் ஒன்றை தெரிவிக்க முடியவில்லை.

(b) முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சுமார் ரூபா 101,113,140 கிரமமான சொத்துக்களின் பயனுள்ள பொருளாதார வாழ்க்கைக் காலத்தை

எஸ்.எல்.பி.எஸ்.ஏ.எஸ் 7 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்ற கணக்கீட்டு நியமத்திலுள்ள 65 ஆம் பந்தியின் பிரகாரம் மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மேற்படி முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட சொத்துக்களின் மதிப்பீட்டு வழு எஸ்.எல்.பி.எஸ்.ஏ.எஸ் 3 – கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றங்கள் மாற்றங்கள் மற்றும் வழுக்கள் என்ற நியமத்தின் பிரகாரம் திருத்தப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(c) அதிகாரசபை 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதன் ரூபா 745,463,465 பெறுமதியுள்ள நிலையான சொத்துக்களை சரியாக குறியீடு செய்திருக்காததுடன், நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் (PPE) பெறுமதியை சரியாகக் கண்டறிந்து அதற்கேற்ப வருடாந்த சொத்து சரிபார்ப்பை மேற்கொள்வதற்கு முடியுமான விதத்தில் அந்த குறியீடுகள் நிலையான சொத்து பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. கைதவிர்க்கப்பட்ட பொருட்களை அகற்றி, புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களைச் சேர்த்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பெறுமதிகளுக்கு ஏற்ப அதிகாரசபை தனது நிலையான சொத்துப் பதிவேட்டை புதுப்பித்திருக்கவில்லை என்பது மேலும் அவதானிக்கப்பட்டது

(d) கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி ரூபா 154,045,468 தொகை பணிக்கொடை கொடுப்பனவுக்காக வைக்கப் பட்டுள்ளது எனக் குறிப்பிட்டு நிலையான வைப்புக்கள், அழைப்பு வைப்புக்கள் மற்றும் திறைசேரி பிணைப்பத்திரங்கள் ஆகியவற்றில் முதலீடு செய்யப் பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த முதலீடுகள் (ரூபா 50 மில்லியன் அழைப்பு வைப்புத்தொகை உட்பட) 4 ஆண்டுகளுக்கும் மேலாக மாற்றமின்றி வைக்கப்பட்டிருந்ததுடன், இந்த பணிக்கொடை முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட ரூபா 7.5 மில்லியன் வட்டி வருமானம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 19 – "ஊழியர் நலன்கள்", இன்

படி பணிக்கொடை கொடுப்பனவுகளுக்கான ஏற்பாட்டுக் கணக்கில் செலவு வைக்கப்படாமல் மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் வருமானமாக கருதப்பட்டிருந்தது. இதன் விளைவாக, மீளாய்வாண்டிற்கான வருமானம் அந்தத் தொகையால் மிகைப்படுத்தப்பட்டிருந்த அதேவேளை பணிக்கொடை ஒதுக்கீட்டுக் கணக்கு குறைத்து கூறப்பட்டிருந்தது.

(e) நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு (யூடீஏ) சொந்தமான காணியில் தொழிற்பட்டு வருகின்ற அதிகாரசபையின் நிர்மாண உபகரண பயிற்சி நிலையம் (CETRAC) இற்கான காணியின் உரித்துறுதியை வழங்குவதற்கு ரூபா 54,890,701 தொகை உள்ளிட்ட 7 சதவீத தாமதக் கட்டணத்தை செலுத்துமாறு 2019 ஆம் ஆண்டில் யூடீஏ அதிகாரசபையை கோரியிருந்தது. இருப்பினும், இந்த அறிக்கைத் திகதி வரை குறித்த தொகையை யூடீஏ இற்கு செலுத்தித் தீர்ப்பதற்கு அதிகாரசபை தவறியிருந்ததுடன் இது தொடர்பில் நிதிக் கூற்றுக்களில் எந்தவொரு ஏற்பாடோ அல்லது வெளிப்படுத்தலோ செய்யப்பட்டிருக்கவில்லை.

(f) 13 வருடகால உத்திரவாத தொடர் கல்வி (NVQ)பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துவதற்காக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 10,000,000 மற்றும் ரூபா 35,844,000 தொகை கல்வி அமைச்சிடமிருந்து அதிகாரசபைக்கு கிடைத்திருந்தது. அதனைத் தொடர்ந்து இந்தத் தொகைகள் தனியானதோர் நிதியக் கணக்கில் செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளிற்கான வருமானமாக அதிகாரசபை அங்கீகரித்திருந்தது. எவ்வா றாயினும் 2021 திசெம்பர் 31 வரையிலும் மேற்படி தொகைகளிலிருந்து ரூபா 13,458,544 மாத்திரமே இந்தப் பயிற்சித் திட்டத்திற்காக செலவாகியுள்ளது. இதன் விளைவாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிறுத்தி வைத்த உழைப்புக்கள் ரூபா 32,299,656 தொகையால் அதிகரித்துக் கூறப்பட்டிருந்த அதேவேளை செலுத்த வேண்டிய கணக்குகள் அதனையொத்த தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது. மேலும், மேற்படி பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கான செயல் முன்னேற்ற அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(g) கிடைக்கப்பபெற்ற தகவல்களின்படி, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 56 வாகனங்கள் அதிகாரசபைக்கு சொந்தமாக காணப்பட்டது. இருப்பினும், 46

வாகனங்கள் தொடர்பான கிரயம், தேய்மானம் மற்றும் திரண்ட தேய்மானம் மாத்திரமே 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் அங்கீகரிக்கப் பட்டுள்ளன. மேலும், இந்த வாகனங்களின் பௌதீக இருப்பை உறுதி செய்வதற்காக மீளாய்வாண்டிலும் அல்லது முன்னைய ஆண்டுகளிலும் பௌதீக கணக்கெடுப்பு நடத்தப்பட்டிருக்கவில்லை. எனவே, மீளாய்வாண்டிலேனும் எஞ்சிய 10 வாகனங்களின் பெறுமதி இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(h) நிலம், நூலகப் புத்தகங்கள், பங்கு விற்பனை வருமானம், வாடகை வருமானம், திறன் மேம்பாட்டுத் திட்டங்களுக்கான செலவுகள் மற்றும் வாகனங்களின் எரிபொருள் மற்றும் இயங்கும் செலவுகள் என ஆறு உருப்படிகள் (06) கணக்காய்வு மூலம் திருப்திகரமாக உறுதிசெய்ய முடியவில்லை. உரிமைப் பத்திரம், சரிபார்ப்பு அறிக்கைகள், துணை ஆவணங்கள், வாடகை வருமானப் பதிவு, மதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் வாடகைதாரர்களின் விவரங்கள், திட்டங்களின் விரிவான திட்டம் மற்றும் முன்னேற்றம், எரிபொருள் நுகர்வு அறிக்கைகள் போன்ற ஆதாரங்களைச் சமர்ப்பிக்காதது.

(i) மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில், ஆணையம் மதிப்பு கூட்டப்பட்ட வரியாக (VAT) வசூலித்தது ரூ. 13,874,360 செலுத்தப்பட்டது. எவ்வாறாயினும், வரி விதிக்கக்கூடிய பொருட்கள் மற்றும் வெளியீட்டு VAT கணக்கீட்டிற்காக கருதப்படும் வருமானத்தின் ஒப்பீட்டு அறிக்கையை அதிகாரம் பராமரிக்கவில்லை. அத்தகைய ஒப்பீட்டை வழங்காமல், 2021 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட VAT செலுத்துதலின் துல்லியம் மற்றும் முழுமையைக் கண்டறிய முடியவில்லை. மேலும் 2021 ஆம் ஆண்டிற்கான VAT வருமானம் தணிக்கைக்கு அழைக்கப்பட்டது ஆனால் வழங்கப்படவில்லை.

(j) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் 5 வகையான சொத்துக்களுடன் சம்பந்தப்பட்டதாக நிலையான சொத்துப் பதிவேட்டிலும் நிதிக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள திரண்ட தேய்மானத்திற்கு

இடையே ரூபா 11,470,290 விளக்கமளிக்கப் படாத வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இருப்பினும் கணக்கிணக்கங்களை மேற்கொள்வதன் மூலம் இந்த வேறுபாடுகளை சீராக்குவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(k) ரூபா 10,753,391 தொகையான 82 கடன்பட்டோர்களிடமிருந்து உறுதிப்படுத்தல்கள் கோரப்பட்டன. இருப்பினும், ரூபா 3,652,559 தொகைக்குரிய 14 கடன் பட்டோர்களிடமிருந்து மாத்திரமே உறுதிப்படுத்தல்கள் கிடைத்திருக்கின்றன. மேலும், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் படி ரூபா 3,787,238 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மீதிகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படாமல் ஐந்து ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவையாக இருந்ததுடன் அந்தத் தொகை இந்த அறிக்கைத் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அத்துடன் ரூபா 1,488,531 தொகையான கடன்பட்டோர் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் எவ்வித மாற்றமும் இன்றிக் காணப்பட்டன. அதன்படி, கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதில் நிச்சயமற்ற தன்மை காணப்பட்டது.

நான் எனது கணக்காய்வை இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (SLAuSs) பிரகாரம் மேற்கொண்டுள்ளேன். அந்த நியமங்களின் கீழ் எனது பொறுப்புக்கள் பற்றி எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்கள் பிரிவில் காணப்படுகின்ற கணக்காய்வு பற்றிய கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் தொடர்பான விடயத்தில் மேலும் விவரிக்கப் பட்டுள்ளன. எனது கணக்காய்வின் நிமித்தம் எனக்கு கிடைத்த கணக்காய்வுக்கான சான்றுகள் எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான ஒரு அடிப்படையை முன்வைக்க போதுமாக மற்றும் பொருத்தமாக இருந்தன என நான் நம்புகின்றேன்.

1.3. அதிகார சபையின் 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையில் உள்ளடங்கியிருந்த ஏனைய தகவல்கள்

ஏனைய தகவல்களில் அதிகார சபையின் 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையில் உள்ளங்கிய தகவல்கள் உள்ளடக்கியிருந்தன. ஆயினும் அத்தகைய தகவல்களில் நிதிக் கூற்றுக்களும் மற்றும் இந்த கணக்காய்வாளர் அறிக்கையின் திகதிற்கு முன்னர் எனக்கு கிடைத்துள்ள அந்த அறிக்கையின் பேரிலான தகவலும் அத்தகைய தகவல்களில் உள்ளடங்கியிருக்கவில்லை. இந்த ஏனைய தகவல்களின் நிமித்தம் முகாமைத்துவம் பொறுப்புக்கூற வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்களை நான் உள்ளடக்கவில்லை. அதன் பேரில் எந்த உத்தரவாத முடிவையும் என்னால் வெளியிடுவதற்கு முடியாது.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில், மேலே இனங்கண்டறிந்த ஏனைய தகவல்களை வாசிப்பதும், அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்கள் பொருண்மையான பிறழ்வுடையதாக காணப்படுகின்றனவா இல்லையெனில் எனது கண்காய்வில் நான் பெற்ற அறிவுக்கு அல்லது நிதிக் கூற்றுக்களுக்கு பொருண்மை அளவில் முரணானதாக காணப்படுகின்றனவா என ஆராய்வதும் என்னுடைய ஒரு பொறுப்பாகும்

அதிகாரசபையின் 2021 ஆண்டு அறிக்கையைப் படிக்கும்போது, அதில் தவறான அறிக்கைகள் உள்ளன என்று நான் முடிவு செய்தால், அதைத் திருத்துவதற்காக ஆளுகைக்குக் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குத் தெரிவிப்பேன். மேலும் திருத்தப்படாத பொய்யான அறிக்கைகள் இருப்பின், அவை அரசியலமைப்பின் 154(6) பிரிவின் விதிகளின்படி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனது அறிக்கையில் சேர்க்கப்படும்.

1.4 நிதிக் கூற்றுக்களுக்கான சிறப்பு நிருவாகம் சாட்டப்பட்டுள்ள முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

இலங்கைப் பொதுக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான கண்ணோட்டத்தை பிரதிபலிக்கின்ற வகையில் நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதும் மற்றும் முகாமை செய்ய வேண்டும் என்ற வகையில் அதன் நிமித்தம் அத்தகைய கட்டுப்பாட்டை பிரயோகிப்பதும் நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான

புறழ்கூற்றுக்களின்றி அல்லது தவறு அல்லது மோசடி நீங்கியதாக தயாரிப்பதை இயலச்செய்வது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது, அதிகார சபையை நிகழும் அடிப்படையில் அதனை முன்னெடுத்து செல்வதற்கு அதற்கு இருக்கும் ஆற்றலையும், அதிகார சபையை மூடிவிடுவதற்கு அல்லது அதனுடைய செயற்பாடுகளை நிறுத்துவதற்கு அல்லது அவ்வாறு செய்யாமல் வேறு எந்தவிதமான உண்மையான மாற்றுவழியும் இல்லையென கருதுகின்ற போது நிகழ்கின்ற கணக்கீட்டு அடிப்படை அம்சத்தை பிரயோகித்து விடயங்களை, ஏற்புடையவாறு வெளிப்படுத்துவதை உறுதிசெய்வது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

அதிகார சபையின் நிதி அறிக்கையிடும் செயல்முறையை மேற்பார்வை செய்வது சிறப்பு நிருவாகம் பொறுப்பு ஒப்படைக்கப்படும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

அதிகார சபை அது தயாரிக்க வேண்டிய அதன் வருடாந்த மற்றும் வழமையான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடிய வகையில் அதன் சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் பொறுப்புக்கள் என்பவற்றின் பதிவுகளையும், புத்தகங்களையும் உரிய முறையில் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பேணுவதற்கு அதிகார சபை தேவைப்படுத்தப்படுகின்றது.

1.5 நிதி கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளருக்கு உள்ள கணக்காய்வு பற்றிய பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறு காரமணாக ஏற்படக் கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நீங்கி இருக்கின்றனவா என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக் கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்ககின்ற ஒரு கணக்காய்வாளர் அறிக்கையை பெற்றுக் கொடுப்பதும் எனது குறிக்கோளாகும். நியாயமான ஒரு உறுதிப்பாடு, உறுதிப்பாட்டின் ஒரு உயர் நிலையாக இருந்தாலும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான

ஒரு புறழ்கூற்று காணப்பட்டால் அதனை எல்லா நேரங்களிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதமளிக்காது. மோசடி அல்லது தவறு காரணமாக பிறழ் கூற்றுக்கள் எழக்கூடும் என்பதால் இந்த நிதி கூற்றுக்களை அடிப்படையாக கொண்டு பரிசீலனையாளர்களால் பொருளாதாரசார் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் போது அது பற்றி கவனத்திற்கொள்ளப்படுதல் வேண்டும்.

என்னால் தொழில்முறை தீர்ப்பினதும் மற்றும் ஐயத்தினதும் அடிப்படையில் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்:

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக் கூற்றுக்களுக்கு ஏற்படக் கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான இடர்களை இனங்கண்டு மதிப்பிடும் பொருட்டு சமயோசித உகந்த கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப் பட்டன. மோசடியும் தவறும் காரணமாக ஏற்படும் இடர்களை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு போதிய உகந்த பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக் கொள்வது எனது இந்த கணக்காய்வுக்கான அபிப்பிராயத்தின் அடிப்படையாகும். போதியளவான உண்மையான கூற்றுக்களிலிருந்து எழுகின்ற இடர்களை விடவும், மோசடியாக நிகழும் இடர்கள் கடுமையானவையாக இருப்பது அவை பொய்யான, போலியான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல், தவறாக காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளிலிருந்து விலகுதல் முதலியன போன்ற காரணங்களினாலாகும்.
- சந்தர்ப்ப சூழ்நிலைகளில் பொருத்தமான உகந்த கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுக்கு உரிய உள்ளக ரீதியான கட்டுப்பாட்டை புரிந்து கொள்ளவதற்காகவேயன்றி, அதிகார சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் பயன்தகு தன்மை தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடும் நோக்கத்திற்கானது அல்ல.
- கணக்கீட்டு மதிப்பீடுகளினதும் மற்றும் முகாமைத்துவம் வெளிப்படுத்திய சம்பந்தப்படும் வெளிப்படுத்தல்களினதும் நியாயத்தன்மையையும் மற்றும் பிரயோகிக்கப்படும் கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாட்டையும் மதிப்பீடு செய்தல்.

- நிகழும் அடிப்படையில் அதிகார சபையை தொடர்ந்து நிருவகித்து செல்லும் பொருட்டு அதற்கு இருக்கின்ற ஆற்றலில் கணிசமான அளவு சந்தேகத்தை தோற்றுவிக்கலாம் எனும் நிகழ்வுகள் அல்லது நிலவரங்கள் சம்பந்தமாக ஏதாவது பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என கண்டறிவதற்கு பெற்றுக் கொள்ளப்படும் கணக்காய்வுக்கான சான்றுகளின் அடிப்படையிலும் மற்றும் கணக்கீட்டு அடிப்படையிலும் மற்றும் நிகழ்கின்ற அடிப்படையிலும் முகாமைத்துவத்தினது பயனின் பொருத்தம் தொடர்பாக முடிவு செய்தல். பொருன்மையான நிச்சயத்தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக் கூற்றுக்களில் காணப்படும் தொடர்புடைய வெளிப்படுத்துகைகளுக்கான என கணக்காய்வு அறிக்கையில் கவனத்தை ஈர்ப்பதற்கும் அல்லது அத்தகைய வெளிப்படுத்துகைகள் போதுமானதாக காணப்படவில்லையெனில் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தை மாற்றவும் தேவைப்படுத்தப்படுவேன். எனது வெளிப்படுத்தல்கள் எனது கணக்காய்வு அறிக்கையின் திகதி வரை நான் பெற்ற கணக்காய்வுக்கான சான்றுகளின் அடிப்படையில் அமைந்திருக்கும். எனினும், நிகழ்வுகள் அல்லது நிலமைகள் தொடர்ந்து செல்ல முடியாதளவுக்கு அதிகார சபையின் இயக்கத்தை நிறுத்த வழிவகுக்கலாம்.

- நிதிக் கூற்றுக்கள் முக்கியமான கொடுக்கல்வாங்கல்களையும் அதே போல் நிகழ்வுகளையும் நியாயமான சமர்ப்பணத்தை அடையக் கூடிய வகையில் பிரதிபலிக்கின்றனவா என்ற அம்சமும் வெளிப்படுத்தல்ளும் அடங்கலாக நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பணவு, கட்டமைப்பு மற்றும் நிதிக் கூற்றுக்கள் என்பவற்றை மதிப்பிடுதல்.

எனது கணக்காய்வின் போது நான் இனங்கண்டறிந்த உள்ளக கட்டுப்பாட்டில் காணப்படும் ஏதாவது கணிசமான குறைபாடுகள் அடங்கலாக ஏனைய விடய அம்சங்களுக்கு மத்தியில் கீழே காணப்படும் விடயங்களை சிறப்பு நிருவாகம் ஒப்படைக்கப் பட்டுள்ள முகாமைத்துவத்திற்கு அறிவிக்கின்றேன்.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகை பற்றிய தேவைப்பாடுகள்

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலும் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திலும் பின்வருகின்ற தேவைப்பாடுகளுக்கான விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

2.1.1 முனைப்பழியுள்ள கருத்து தொடர்பான அடிப்படைப் பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவுகள் தவிர, கணக்காய்வுக்கு தேவையான சகல வகை தகவல்களையும் மற்றும் விளக்கங்களையும் நான் பெற்றுள்ளேன். மேலும் எனது பரீட்சையிலிருந்து தோன்றிய வரையில், முறையான கணக்குப் பதிவுகள் அதிகார சபையினால் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (a) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்க பேணப்பட்டுள்ளன.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 6 (1) (d) (iii) இன் தேவைப்பாடுகள் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்களுடன் ஒத்துப்போகின்றன.

2.1.3 சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை கூற்றுக்களில் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 6 (l) (d) (iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் நான் செய்த அனைத்து சிபாரிசுகளும் உள்ளடங்குகின்றன.

2.2 நடைமுறைகள் மற்றும் பெறப்பட்டிருந்த சான்றுகள் ஆகியவற்றின் அடிப்படையில் பொருண்மையான விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த விடயம் எதனையும் நான் அவதானிக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தின் 12 (d) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க அதிகார சபையின் ஆளுகை சபையில் உள்ள எந்தவொரு உறுப்பினருக்கும் வணிகத்தின் இயல்பான காரணத்திற்கு அப்பாற்பட்ட எந்தவொரு ஒப்பந்தத்திலும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அக்கறை இருப்பதாக தெரியவில்லை.

2.22 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 (f) இன் தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகார சபையின் ஆளுகை சபை வெளியிட்டுள்ள ஏற்புடைய சட்டம், பொது மற்றும் சிறப்பு வழிகாட்டல்கள் ஆகியவற்றிற்கு அதிகார சபை இணங்கவில்லை என்பதை தவிர;

சட்டங்களுக்கான/ வழிகாட்டல்களுக்கான குறிப்பு	*விளக்கம்*

(a)1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு	நிதிக்கூற்றுக்களுடன் இணைத்து 2021 ஆம் ஆண்டிற்கான வரைவு வருடாந்த அறிக்கை இந்த அறிக்கைத் திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை
(b) 2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தின் பகுதி II பிரிவு 7 (1)	அமெரிக்க டாலருக்கு நிகராக ரூபாவின் மதிப்பு பெருமளவு சரிந்துள்ளமை, எரிபொருள் தட்டுப் பாடு, நிர்மாணப் பொருட்களின் பெருமளவு விலை ஏற்றம் மற்றும் நிர்மாணப் பொருட்களின் பற்றாக்குறை போன்ற நிர்மாணக் கைத்தொழில் எதிர்கொண்டுள்ள தற்போதைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை முன்மொழிவதற்காக 03 மாதங்களுக்கு ஒரு முறையேனும் தேசிய ஆலோசனைக்குழு (NAC) கூட்டத்தை நடத்துவது மிகவும் முக்கியமானதாகும். எவ்வாறாயினும், தேசிய நிர்மாணக் கொள்கையைத் திருத்துவதற்கும், நிர்மாணத்துறையின் வளர்ச்சி மற்றும் நிலைபேறான தன்மைக்குத் தேவையான நடவடிக்கைகளை முன்மொழிவதற்கும் என மீளாய்வாண்டிலோ அல்லது அதற்கு முந்தைய ஆண்டிலோ கூட்டம் NAC கூட்டம் நடத்தப்பட்டிருக்கவில்லை.

	தற்போதைய அதிகார சபையின் சுட்டிகளும் நாட்டின் உண்மையான விலை ஏற்ற இறக்கங்களை பிரதிபலிக்கவில்லை என்பது மேலும் அவதானிக்கப்பட்டது.
(c) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 7(1) (அ), (ஆ) மற்றும் (இ) பிரிவுகள்	2022 சனவரி 11 மற்றும் 2022 மார்ச் 18 ஆகிய திகதிகளில் மீளாய்வாண்டில் இடம்பெற்ற சபைக் கூட்ட குறிப்புக்களை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டிருந்த போதிலும் அவை சமர்ப்பிக்கப்படவில்லை.
(d) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்	
(i) நிதிப் பிரமாணம் 571(2)	2 ஆண்டுகளிற்கு மேற்பட்ட அனைத்து வைப்புக் களும் அதிகாரசபையின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்படாது இனங்காணப்படாத மற்றும் செலுத்த வேண்டிய பிடிகாசு, கேள்விப்பண வைப்புக்கள்
(ii) நிதிப்பிரமாணங்கள் 756,757,758 மற்றும் 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை	(i) ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியின் இறுதியில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் படுகின்ற நடைமுறையல்லா சொத்துக்களின் பௌதீக கிடைப்பனவை உறுதிப்படுத்து வதற்காக ஒவ்வொரு

	அறிக்கையிடல் காலத்திற்கும் வருடாந்த சொத்துக் கணக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபையின் சொத்துக்கள் தொடர்பிலான இக்கணக்கெடுப்பு மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டு அதன் மீதான அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் மர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. (ii) முன்னைய பெருள் மெய்மையாய்வுச்சபை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த குறைபாடுகள் (பற்றாக்குறை மற்றும் மேலதிகங்கள்) இந்த அறிக்கைத் திகதி வரை திருத்தப்பட்டிருக்கவில்லை. (iii) முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் படி அந்த மெய்மையாய்வுச் சபையானது நிதிப்பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டள்ள (T&A 66 மற்றும் பொது 47) படிவங்களை பயன்படுத்தி ற்கொள்ளப்பட்டிருக்காமை வெளிப்படுத்தப்பட்டது.

(e) 2020 சனவரி 27 ஆந் திகதிய பீஈடீ/ 01/2020 ஆம் இலக்க நிதி. பொருளாதார மற்றும் கொள்கை வகுத்தல் அமைச்சின் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தி	ஒவ்வொரு சேவைக்குமான கட்டணங்கள், மதிப்பிடப்பட்ட காலம் போன்றவற்றை உள்ளடக்கிய பிரசைகள் சாசனம் பொதுமக்கள்/ சேவை நாடுனரின் பார்வைக்காக அலுவலக வளவிலும் நிறுவனத்தின் இணைய தளத்திலும் காட்சிப்படுத்தப் படுவதனை தலைவரும் பணிப்பாளர் சபையும் உறுதிப்படுத்துதல் வேண்டும். இருப்பினும், அதிகாரசபை இந்த அறிவுறுத்தலுடன் 2022 மே 31 ஆந் திகதி வரையிலும் இணங்கி ஒழுகியிருக்கவில்லை.
(f) நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டலின் 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை	
4.2.5 ஆம் பந்தி	இருப்புக்கள் மீதான காலப்பகுப்பாய்வு மாதாந்த அடிப்படையில் பணிப்பாளர் சபையின் மீளாய்வுக்கும் கலந்தாலோசித்தலுக்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபை அதன் கணக்கீட்டு முறைமையிலிருந்து இருப்பு காலப் பகுப்பாய்வு அறிக்கையை உருவாக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது. ஆகையால், இருப்புக்காலப் பகுப்பாய்வின் அடிப்படையில்

	மெதுவாக நகர்கின்றது. அசைவுறாதுள்ள மற்றும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத இருப்குக்களை கண்டறிவதில் அதிகாரசபை சிரமத்தை எதிர்கொண்டுள்ளது
6.5.3 ஆம் பந்தி	2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை
9.14 ஆம் பந்தி	மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்புடைய அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை வழங்குகின்ற நடைமுறை வழிகாட்டல் கையேடொன்று காணப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையின் மனிதவளத்தை வினைத்திறனாக முகாமைத்துவம் செய்வதற்கேற்ற அவ்வாறானதோர் அங்கீகரித்த வழிகாட்டல் கையேடொன்றை அதிகாரசபை வைத்திருக்கவில்லை.
(g) 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க மற்றும் 2020 சனவரி 03 ஆம் திகதிய 01/2017(1) ஆம் இலக்க பொது முயற்சி சுற்றறிக்கைகள்	அதிகாரசபைக்கு உரித்தான மற்றும் வாடகைக்கு விடப்பட்ட காணி மற்றும் கட்டிடங்களது நாளதுவரையான தகவல்கள் 2021 மார்ச் 15 இற்கு முன்னர் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபை 2022 ஏப்ரல் 30ஆந் திகதி வரையிலும் அதற்கேற்ப செயற்பட்டிருக்கவில்லை.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய தணிக்கைச் சட்டத்தின் பிரிவு (g) இன் விதிகளுக்கு இணங்க, பின்வரும் நிகழ்வுகளைத் தவிர, அதிகாரம் அதன் அதிகாரங்கள், செயல்பாடுகள் மற்றும் கடமைகளைச் செய்யவில்லை என்று அறிவிக்க

அதிகாரசைபை ஸ்தாபிக்கப்பட்டு ஏழு (07) ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், அதிகாரசபையின் சீரான மற்றும் பயனுறுதியான செயற்பாட்டிற்காக 2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் செயற்பாடுகளை அதிகாரசபை செயற்படுத்தியிருக்கவில்லை.

இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளின் மூலம் தீர்மானிக்கப்பட்டவாறாக நிர்மாணத் தொழிலில் பயன்படுத்தப்படும் நிர்மாணப் பொருட்கள் மற்றும் நிர்மாண ஆக்கக்கூறுகளின் இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குனர்களின் விபரத்கொத்தொன்றை பேணுதல்.

இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் தீர்மானிக்கப்பட்டவாறு நிர்மாணக் கைத்தொழிலில் ஈடுபடுகின்ற திறமையான வேலையாட்களிற்கு கைவினை அடையாள அட்டைகளை பதிவு செய்து, வழங்குவதற்கு ஏற்பாடு செய்தல்.

நிர்மாணக்கைத்தொழில் அபிவிருத்தி நிதியத்தை ஸ்தாபித்தல்.

வேறு நாடுகளில் நிர்மாண வேலைகளை பொறுப்பெடுக்கும் உள்நாட்டில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களை மேற்படுத்தி அவர்களிற்கு வசதியளித்தல்

நிர்மாணக் கைத்தொழிலிற்குத் தேவைப்படுகின்ற பொருட்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை பரிசீலனை செய்தலும் கண்காணித்தலும் அத்துடன் நிர்மாண வேலைகளில் உள்நாட்டு உற்பத்திப் பொருட்களின் அபிவிருத்தி மற்றும் பயன்பாட்டை ஊக்குவித்தலும்

நிர்மாணக் கைத்தொழில் மீதான தேசிய தரவுத் தளமொன்றை பேணுதல்

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (h) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகார சபையின் வளங்கள் பொருளாதார ரீதியாகவும் மற்றும் திறமையாகவும் அதே போல் பயனுள்ள வகையிலும் குறித்த கால எல்லைக்குள் ஏற்புடைய சட்டங்களுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படவில்லை என்பதை குறிப்பிடுவது தவிர;

(a) பல்வேறு நோக்கங்களிற்காக அவ்வப்போது திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட ரூபா 202 மில்லியன் முதல் ரூபா 410 மில்லியன் வரையான வீச்சிலமைந்த சராசரியான வங்கி மீதிகள் எந்தவொரு நோக்கத்திற்கும் பயன்படுத்தப்படாது 2018 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு மாதமும் அதிகாரசபையின் தலைமை அலுவலகத்தால் பேணப்பட்டு வருகின்ற வங்கி நடைமுறைக் கணக்கில் விளைவற்று வைக்கப்பட்டிருந்ததுடன் இந்த நிலுவையானது தொடர்ச்சியாக அதிகரித்து 2022 பெப்ரவரி மாத இறுதியில் ரூபா 414.8 மில்லியனாக அதிகரித்திருந்ததுக் காணப்பட்டது. 2018 சனவரி முதல் 2021 திசெம்பர் வரை மேற்படி பணத்தை வங்கி நடைமுறைக் கணக்கில் விளைவற்ற முறையில் வைத்திருந்ததன் விளைவாக அரசாங்கத்திற்கு ஏறத்தாழ ரூபா 98.3 மில்லியன் நிதி நட்டம் ஏற்பட்டிருந்தது.

(b) அதிகாரசபையின் ரூபா 6,412,500 பெறுமதியான நான்கு (04) வாகனங்கள் 05/2020 ஆம் இலக்க 2020 ஒக்தோபர் 02 ஆம் திகதிய நிதி அமைச்சால் வெளியிடப்பட்ட சொத்துகள் முகாமைத்துவ சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் படி பயன்படுத்தப்படாது. திருத்தப்படாது அல்லது அகற்றப்படாது 03 ஆண்டுகளுக்கும் மேலாக அதிகாரசபைக்கு சொந்தமான CETRAC கட்டிட வளாகத்தில் 2022 மார்ச் 31 வரையிலும் அழிவுறும் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

2.3 **மற்ற விஷயங்கள்**

(a) பல்வேறு தரப்பினர்களிற்கு அவ்வப்போது வழங்கப்பட்ட ரூபா 1,347,357 தொகையான பதினாறு முற்பணங்கள் மற்றும் மற்கொடுப்பனவுகள் அந்த மீதிகளை இனங்காணாது மற்றும் அறவிடப்படாது ஐந்து ஆண்டுகளிற்கும் மேலாக கணக்குகளிற்கு தொடர்ச்சியாக முன்னெடுத்து வரப்பட்டிருந்தது.

(b) நிதிக்கூற்றுக்களின் படி 2021, திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டிய பிடிகாசு ரூபா 3,141,125 ஆனதுடன் அதில் ரூபா 2,274,459 ஆனதோர் தொகை அல்லது 72 சதவீதமானவை 2022 மே 31 வரை தீர்க்கப்படாது 05 ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவையாகவுள்ளது. அவ்வாறே ரூபா 4,660,622 மொத்தத் தொகையான சில்லறைக் கடன் கொடுத்தோர்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவையாக உள்ளதுடன் அதில் ரூபா 687,517 தொகை இவ்வறிக்கைத் திகதி வரையிலேனும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. அதேவேளை, இந்த மீதிகள் 2022 ஏப்ரல் 30 வரை எவ்வித மாற்றமும் இன்றிக் காணப்பட்டது.

(c) அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கான கூட்டிணைந்த ஆளுகைக்கான வழிகாட்டுதலின் 2.3 ஆம் பந்தியின் படி, தெளிவாக வரையறுக்கப்பட்ட செயலாற்றல் குறிகாட்டிகள் (KPIs) காணப்படுவதை உறுதிசெய்து, திட்டம் அமுல்படுத்தப்படுவதைத் தொடர்ச்சியாக மீளாய்வுசெய்து நிர்ணயிக்கப்பட்ட நோக்கங்கள் அடையப்படுவதற்குத் தேவையான இடங்களில் திருத்தும் நடவடிக்கைகளை எடுப்பதற்காக 2021-2025 மற்றும் 2022 -2026 காலகட்டத்திற்கான ஒரு தந்துரோபாயத் திட்டம், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கான கூட்டிணைந்த ஆளுகைக்கான வழிகாட்டுதலின் வழிகாட்டுதல்களின் பின்னிணைப்பு 1 இல் தரப்பட்டுள்ள வடிவமைப்பின்படி, மீளாய்வாண்டிற்கும் எதிர்வரும் ஆண்டிற்குமான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு 2022 ஏப்ரல் 30 வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(d) நிர்மாணத்தொழிலில் ஈடுபட்டுள்ள தேர்ச்சிபெற்ற கைவினைஞர்களிற்கு கைவினைஞர் அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்காக பொதுத் திறைசேரியிலிருந்து 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் ரூபா 35.7 மில்லியன் தொகை

பெறப்பட்டிருந்தது. இதில் ரூபா 11.3 மில்லியன் தொகை இத்திட்டத்தை செயற்படுத்துவதற்கான முற்பணமாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு (ICTA) 2019 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தது. அதன்பின்னர், ICTA இனால் குறித்த நோக்கத்தை நிறைவேற்றாது அந்த முற்பணத்திலிருந்து ரூபா 9.6 மில்லியன் தொகை 2021 ஆம் ஆண்டில் அதிகாரசபைக்கு மீளளிக்கப்பட்டிருந்ததுடன், இதற்காக கிடைத்திருந்த முழுத்தொகையும் அதற்குரிய நோக்கத்தை நிறைவேற்றாது 2022 ஏப்ரல் மாத இறுதி வரையிலும் வங்கி நடைமுறைக்கணக்கில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தது.

மேலும் ICTA இல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ரூபா 1.7 மில்லியன் முற்பணக் கொடுப்பனவை தீர்க்காமைக்கான காரணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.

(e) 2006 சனவரி 01 முதல் 2011 மே 31 வரையான காலப்பகுதிக்குரிய ஊழியர் சேமலாப நிதி (EPF) தொகையான ரூபா 14,977,525 தொகையினை செலுத்தத் தவறியமையால் EPF இனால் ரூபா 7,488,762 தொகை மிகை அறவீடாக விதிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த செலுத்தவேண்டிய ரூபா 22,466,287 தொகையானது 2022 ஏப்ரல் 30 வரை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(f) 2003 ஜூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக அதிகாரசைபயின் இரண்டு ஊழியர்கள் முறையே 2002 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தனர் / இணைப்பட்டிருந்தனர். மேலும், 2021 திசெம்பர் 31 வரை அதிகாரசபையால் இந்த உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளம் மற்றும் பிற கொடுப்பனவுகளை கணிப்பிட்டு அதனை வரிசை அமைச்சிலிருந்து மீளப் பெறுவதற்கு 2022 ஏப்ரல் 30 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(g) அதிகாரசபையின் பணிப்பாளர் (நித) 2021 ஒக்தோபர் 08 முதல் நடைமுறைக்கு வரம் வகையில் அவர் அதிகாரசபையில் சேவையாற்றுகையில் கடுமையான முறைகேடு மற்றும் பொது நிதியை தவறாக பயன்படுத்தியதாகத் தெரிவித்து பணிநீக்கம் செய்யப்பட்டார். எவ்வாறாயினும், இந்த உத்தியோகத்தர் செய்த முறைகேடுகள் மற்றும் பொது நிதியை துஷ்பிரயோகம் செய்தமை குறித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அதிகாரசபையின் பிரதான உள்ளக கணக்காய்வாளர் 2022 திசெம்பர் 31 முதல் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். எனினும், இந்த அறிக்கை திகதி வரை அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(h) அதிகாரசபையின் முன்னையநாள் பணிப்பாளர் நாயகம் தனது சேவையை நிறுத்தியமைக்கு எதிராக 2021 சனவரி மாதத்தில் ஏறத்தாழ ரூபா 1,956,538 இழப்பீட்டுத் தொகையைக் கோரி தொழில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். அவரது சேவையை நிறுத்துவதற்கு எடுக்கப்பட்ட முறையற்ற மற்றும் சட்டவிரோத முகாமைத்துவ தீர்மானம் காரணமாக இத்தொகை அதிகாரசபைக்கு இனங்காணப்பட்ட இழப்பு என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன் இந்த பதவியும் 2022 மார்ச் 31 வரை வெற்றிடமாக காணப்பட்டது.

கையெழுத்திட்டது: டப்ளியூ.பி.சி. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் அதிபதி

4.0 செயலாற்றுகை சார்ந்த சுட்டிகள்

இல.	விஷேட சுட்டிகள்	உண்மையான பலன் - எதிர்பார்த்த பலனின் ஒரு விகிதமாக (%)		
		100%- 90%	75%-89%	50%-74%
1	**நிர்மாணக் கைத்தொழிலின் மேற்பார்வை மற்றும் ஒழுங்குறுத்துகை**			
1.1	ஒப்பந்தத் தரப்புகளைப் பதிவு செய்தல்			53%
1.2	வெளிநாட்டு ஒப்பந்தத் தரப்புகளை ஒரு கருத் திட்ட அடிப்படையில் பதிவு செய்தல்	>100		
1.3	ஆதன அபிவிருத்தித் தரப்புகளைப் பதிவு செய்தல் மற்றும் அந்தத் தரப்புகளின் விவரக்கொத்தை பேணுதல்			<50%
1.4	நிர்மாணத் தொழிலாளர்களைப் பதிவு செய்தல் மற்றும் அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தல்			<50%
2	**கண்காணித்தல் மற்றும் ஒழுங்குறுத்துகை**			
2.1	இனங்காணப்பட்ட நிர்மாணப் பணிகளை ஊக்குவித்தல் மற்றும் காத்திரமான நிர்மாண மதிப்பீட்டின் நிமித்தம் தேசிய விருதுகளை வழங்கல்	>100		
3	**நிர்மாணக் கைத்தொழிலுக்கு தேவையான தர நியமங்கள் மற்றும் தகவுதிறன்கள் ஆகியவற்றை தயாரித்தல் மற்றும் அவற்றை முகாமை செய்தல்**			
3.1	நிர்மாணக் கைத்தொழிலில் அக்கறை உடைய தரப்புகளின் சார்பாக நிர்மாணக் கைத்தொழிலுடன் தொடர்புடைய தகவுதிறன்கள், தர நியம ஆவணங்கள், சஞ்சிகைகள் முதலியவற்றை வெளியிடுதல்	>100%		
3.2	தொழில்நுட்பக் கணக்காய்வு செயல்முறையை பேணுதல்			<50%
3.3	தொழில்நுட்பக் கணக்காய்வாளர்களைப் பதிவு செய்தல்	>100%		
4	**நிர்மாணக் கைத்தொழிலுக்கு தேவையான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல்**			
4.1	NVQ 4 வேலைச்சட்டகத்தின் கீழ் நிர்மாண எந்திரக் கைப்பணி வல்லுநர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை (CETRAC) நடத்துதல்			<50%
4.2	கல்வி நிகழ்ச்சித் திட்டங்களின் (CHPB) NVQ மட்டம் 4 பாடநெறிகளை நடத்துதல்		83%	
4.3	அடிப்படை நிர்மாண எந்திர இயக்குநர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் - BaCEM (OTC)			<50%
4.4	திறன்கள் அபிவிருத்தி குறுங்காலப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்தரங்குகள் (CETRAC)			<50%
4.5	நிர்மாணக் கைப்பணி வல்லுநர் பயிற்சி "சிரம சிக்குரு"			<50%